# இலங்கையில் அம்புலி வீரர் ஆம்ஸ்ரேங்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

நத்தார்—புத்தாண்டு
ஜவுளித் தேவைகளை
பூர்த்தி செய்து கொண்டீர்களா?
உங்கள்
தெரிவுக்கான உயர்ந்தரக
ஜவுளி வகைகளும்
றெடிமேட் உடுப்புகளும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்-
இன்றே விஜயஞ்செய்யுங்கள்.
கணேசன் ஸ்ரோர்ஸ்
78, 63, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELANADU
National Tamil Daily
தபால் பெட்டி எண் 49
போன்: 389
மலர் 11
இதழ்: 311
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் மார்கழி 6 ஷவ்வால் 11 ஞாயிற்றுக்கிழமை [21-12-69]

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்

டொலர் கோர்ப்பரேஷன்

## விமான நிலைய தேநீர்சாலையில் திடீர் பிரசன்னம்

[நமது] கொழும்பு நிருபர் 'சூரி']

அப்பல்லோ -11 அம்புலி வீரர் திரு நீல் ஆம்ஸ்ரேங் நேற்று எவரும் எதிர்பாராதபடி இலங்கையில் வந்திறங்கினர். கட்டுநாயகா விமான நிலையத்தில் தேயிலை பிரசாரச்சபையினரின் சிற்றுண்டிச்சாலையில் தேநீர் அருந்துவதற்கு வந்திருந்தபோதே இலங்கை மக்கள் சிலர் ஆம்ஸ்ரேங்கை அடைய ளங் கண்டுகொண்டனர்,

அமெரிக்க தூதுவராலயத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் ஆம்ஸ்ரேங்கை விமான நிலயத்தில் சந்தித்துப் பேசினர், இலங்கை ஒரு அழகான நாடாகஇருப்பதைவிமானத்தில் வந்துகொண்டிருந்த போது அவதானித்ததாக அவர் கூறினர், இலங்கைக்கு தாம் மீண்டும் வர விருப்பதாகவும் அவர் தெரிவித்தார், இலங்கைத் தேயிலை மிக ருசியாக இருப்பதாக அவர் கூறினர்,

லொஸ் ஏன்ஜல்சிலிருந்து பாங்கொக் சென்றுகொண்டிருந்த விமானம் கட்டுநாயக்கா விமான நிலயத்தில் தரித்துச் செல்லவேண்டியேற்பட்டதால் அம்புலி வீரர் ஆம்ஸ்ரேங் இலங்கையில் இறங்கவேண்டி நேரிட்டது. தேனீர் அருந்துவதற்கு வந்திருந்த ஆம்ஸ்ரேங்கை தாங்கள் அடையாளம் கண்டுகொள்ளவில்லையென்றும் பின்னர் தான் அவர் அம்புலி வீரர் என்று தெரியவந்ததாகவும் பொதுமக்கள் சிலர் தெரிவித்தனர்.

# கொலையுண்ட சிப்பாய்களின் துப்பாக்கி கிடைத்தது

## பொலிஸ் அதிபரும் தளபதியும் நிலைமையை நேரில் ஆராய்வர்

தள்ளாடி, சனி

மன்னாரில் தாழ்வுபாடுகிராமத்தில் கொலைசெய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட இரண்டு இராணுவ சிப்பாய்களின் துப்பாக்கிகளில் ஒன்றை பொலிசார் கண்டெடுத்துள்ளனர். இந்த இரட்டைக்கொலை சம்பந்தமாக சந்தேகத்தின்பேரில் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ள 21 பேரும் நாளை ஞாயிற்றுக்கிழமை மன்னார் பதில் நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்படுவர்.

இரட்டைக்கொலை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் தேடப்பட்டு வந்தவர்களில் மேலும் நான்கு பேரும் இன்று மன்னார்ப் பிரதிநிதி திரு. வி. ஏ. அழகக்கோன் மூலம் பொலிசில்சரணடைந்தனர்.

### தளபதியும் வருவார்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் [illegible] லது நாளை மன்னாருக்கு வருகை தந்து நிலைமையை நேரில் ஆராயவிருப்பதாக [illegible]ப்படுகிறது.

[illegible]ராணுவத்தினர் இப்போது கடலில் ரோந்துக் காவல் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். சட்டவிரோதக் குடியேற்[illegible] டிக்கைகளை [illegible] கு[illegible]யேற்றத் தடுப்புப்பிரிவு உதவிப் பொலிஸ் சுப்ரின் [illegible]

### உகண்டாவில் தடை

கம்பாலா, டிச 20

உகண்டாவில் அவச[illegible]கால நிலை பிறப்பிக்கப்ப[illegible]ருக்கிறது எதிர்க்கட்சிகள் யாவும் தடைசெய்யப் பட்டுள்ளது உகண்டா ஜனதிபதி [illegible] நேற்றிரவு [illegible]தெரியாத ஒருவரால் சுடப்பட்டதைத் [illegible]ர் [illegible]த்து இந்த நடவடிக்கை [illegible]

சிவியா தெரு

### சாதிப்பெயர் மாற்றப்பட்டு இரு கி. சே. நியமனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிவியாதெருகிராமசேவையாளர்பிரிவு பெயர்மாற்றப்பட்டு அரியாலை கிழக்கு, அரியாலைமேற்கு என இரண்டு கிராமசேவையாளர்கள் பிரிவாகப்பிரிக்கப்பட்டுள்ளது.

சாதியின் பெயரால் இயங்கிவந்த இக்கிராமசேவையாளர்பிரிவு உள்நாட்டமைச்சரின் உத்தரவைத் தொடர்நது இம்மாதம் 7ந் திகதி முதலே இருபிரிவுகளாக்கப்பட்டது.

ஏற்கனவே இங்கு கிராமசேவையர்ளராக இருந்து வந்த திரு, என். கணபதிப்பிள்ளை அரியாலை கிழக்கிலும் வண். வட-மேற்கு கிராமசேவையாளராகக் கடமையாற்றிவந்த திரு. தா. சிவபாதசுந்தரம் அரியாலை மேற்குக்கும் கிராமசேவையாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் காரியாதிகாரி கந்தோர் ஊழியர் ஒருவரைத் தாக்கியதென்ற குற்றச்சாட்டில் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த கிராமசேவையாளர் திரு. எம். ஐயாத்துரை வண், வட-மேற்குக்கு மீண்டும் கிராமசேவையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(கா. நி.)

தெல்லிப்பளை

### வீரமன் மருத்துவ மனை 25-ல் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாச் சங்கம் நிறுவும் புதிய மருத்துவமனைத் திறப்புவிழா இம்மாதம் [illegible] திரு. பி. ஈ. வீரமனைக் கௌரவிக்குமுகமாக இம் மருத்துவமனைக்கு வீரமன் மருத்துவ மனை எனப்பெயர் இடப்பட்டுள்ளது.

### விஞ்ஞானகூடத் திறப்புவிழா

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சித் தொகுதி குடியேற்றத் திட்டங்களில் முதன் முதலாக நிறுவப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வு கூடத்தைத் திறந்துவைப்பதில் நான் மகிழ்வடைகின்றேன்'' என உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள விஞ்ஞான ஆய்வுகூடத்தை திறந்துவைத்துப் பேசிய கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினர்.

கிளிநொச்சி காரியாதிகாரி திரு, இ யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு இரத்தினம் தொடர்ந்து பேசுகையில், போதிய மாணவர்கள் இல்லாத காரணத்தினல் இந்த விஞ்ஞான ஆய்வுகூடத்தை நிறுவுவதற்கு இயலாதென்று அரசாங்கம் மறுத்த போது ஆட்சிமன்றத்தில் நான் கேட்ட விளைவுக்கு [illegible]

### 'அடையாள அட்டையால் தமிழருக்கு ஆபத்தில்லை'

அல்லைப்பிட்டி, சனி

தமிழ்மக்கள் இந்நாட்டில் சுதந்திரமாக வாழ்க்கை நடாத்துவதற்கு நாம் என்றும் அயராது பாடுபடுவோம். தமிழரசுக்கட்சி அடையாள அட்டை மசோதாவை ஆதரித்ததினல் அது தமிழருக்கு துரோகம் செய்துவிட்டதென சிலர் பிரசாரம்செய்து வருவது வேடிக்கையான செயலாகும்.

கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு, கா. பொ. இரத்தினம் வேலணையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிகூட்டமொன்றில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்,.

திரு. இரத்தினம் மேலும் பேசுகையில் தமிழரசுக் கட்சி தமிழ்மக்களை ஒரு போதும் காட்டிக்கொடுக்கவில்லை. அடையாளஅட்டையினல் தமிழ்பேசும் மக்களுக்கு எந்தவிதமான ஆபத்துமில்லையென்பதை தெரிவிக்கின்றேன். சிங்களவர்கள், தமிழர்கள் என்று வேற்றுமையின்றி ஒரே வகையான நன்மையையே அதுசெய்கிறது. மலாயா, சிங்கப்பூர் போன்ற நாட்டு மக்களுக்கு அந்நாட்டுப் பிரஜைகளென நிரூபிப்பதற்கு அடையாளஅட்டை வழங்கப்பட்டுள்ளது, இந்நாட்டு மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது இந்நாட்டு பிரஜைகளென நிரூபிப்பதற்கு முடியாமல் கஷ்டப்படுகிருர்கள் என்பதை எல்லோரும் நன்கு அறிவர். இந்நிலையில்அடையாள அட்டை மசோதாவைஎதிர்த்து நாம் என்ன பலனைக் காணப் போகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25-ல் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஞாயிறு தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாச் சங்கம் நிறுவும் புதிய மருத்துவமனைத் திறப்புவிழா இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவிருக்கின்றது

சர்வதேச கூட்டுறவு நிறுவனத்தின் தென்கிழக்காசியப்பிரதேச அதிகாரியும், முன்னாள் இலங்கைக் கூட்டுறவு ஆணையாளருமான திரு. பி. ஈ. வீரமனைக் கௌரவிக்கு முகமாக இம் மருத்துவமனைக்கு வீரமன் மருத்துவ மனை எனப்பெயர் இடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 25-ம் திகதி மாலை இதனைத் திறந்துவைப்பார். திரு. வீரமனும் இவ்வைபவத்தில் கலந்துகொள்வார். (கா. நி)

நான்கு பேரும் இன்று மன்னார்ப் பிரதிநிதி திரு. வி. ஏ. அழகக்கோன் மூலம் பொலிசில்சரணடைந்தனர்.

### தளபதியும் வருவார்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலரிக்அபய குணவர்த்தனவும் இராணுவத் தளபதியும் இன்று அல்

...போது கடலில் ரோந்துக் காவல் வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். சட்டவிரோதக் குடியேற்றத்தடுப்பு நடவடிக்கைகளை சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்புப்பிரிவு உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் திரு. ஜோசப் தலைமையில் பொலிசார் கவனித்துவருகின்றனர்.

...கிறது எதிர்க்கட்சிகள் யாவும் தடைசெய்யப் பட்டுள்ளது உகண்டா ஜனதிபதி ஒபோட்டே நேற்றிரவு இனந்தெரியாத ஒருவரால் சுடப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது இங்கு இன்று அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டது.

(விபரம் 3ம் பக்கம் பார்க்க)

...யில், போதிய மாணவர்கள் இல்லாத காரணத்தினுல் இந்த விஞ்ஞான ஆய்வுகூடத்தை நிறுவுவதற்கு இயலாதென்றுஅரசாங்கம் மறுத்தபோது ஆட்சிமன்றத்தில் நான் கேட்ட வினவுக்கு கல்விமந்திரி அளித்த விடை ஆதாரமாக வைத்தே இங்கு விஞ்ஞானக்கூடம் நிறுவவேண்டுமென்று பல தடவை வற்புறுத்தி இதனைப் பெற்றேன் மாணவர்கள் கலைப்பிரிவுப் பாடங்களைப் படிப்பதை விடுத்து விஞ்ஞானப் பாடங்களைக் கற்ருல் நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தை தவிர்ப்பதுடன் நாட்டை முன்னேற்றவும் முடியும் என்று குறிப்பிட்டார்

திரு. இரத்தினம் மேலும் பேசுகையில் தமிழரசுக் கட்சி தமிழ்மக்களை ஒருபோதும் காட்டிக்கொடுக்கவில்லை. அடையாளஅட்டை நிலையில்அடையாளஅட்டை மசோதாவைஎதிர்த்து நாம் என்ன பலனைக் காணப் போகின்ருேம்.

## இந்திராவை நீக்கியது சரியென்கிறது 'சின்டிகேட் குழு'

ஆமதாபாத் டிச, 20 பிரதமர் இந்திராகாந்தி உட்பட மற்றும் பலரையும் காங்கிரஸிலிருந்து வெளியேற்றியதை திரு நிஜலிங்கப்பா தலைமையிலான அகில இந்தியக் காங்கிரஸின் காரியக்கமிட்டி இன்று அங்கீகரித்தது

நாட்டின் பொருளாதாரக் கொள்கையும் வெளிவிவகாரக் கொள்கையும் மோசமான நிலையை அடைந்துள்ளதாக காரியக் கமிட்டி கருத்துத் தெரிவித்தது

கமிட்டி இன்று மீண்டும் கூடி தற்போதைய அரசியல் நிலை பற்றி ஆராய்ந்தது

கிளிநொச்சி, ஞாயிறு கிளிநொச்சி உருத்திரபுரம் வீதி போக்குவரத்துக்கு உதவாத நிலையில் உள்ளதால் வாகனங்களும் பாதசாரிகளும் மிகவும் கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

## பல்கலைக்கழகம் திருமலையில் நிறுவப்பட வேண்டும்'
### கமிஷன்முன் சாட்சியம்பற்றி எஸ். ஜே. வி. விளக்கம்

கொழும்பு, சனி திருகோணமலையில் பல்கலைக்கழகம் அமைக்கப் படவேண்டுமென்ற தமிழரசுக் கட்சியினரின் விருப்பத்தையே பல்கலைக்கழகம் அமைப்பது சம்பந்தமாக நியமிக்கப்பட்ட கமிஷன் முன் தமிழரசுக்கட்சி வலியுறுத்தவிருப்பதாக தமிழரசுக்கட்சித் தலைவர் திருஎஸ். ஜே.வி. செல்வநாயகம் இன்று நமது நிருபரிடம் தெரிவித்தார்:

மேற்படி கமிஷன் சாட்சியங்களைப் பதிவு செய்ய ஆரம்பித்து விட்டதாகக் கூறிய எஸ். ஜே. வி. தமிழரசுக்கட்சி தனது கொள்கையிலிருந்தும் விலகப் போவதில்லையெனக்கூறினர்.

திரு செல்வநாயகம் இன்று கல்வி அமைச்சரைச் சந்தித்து தோட்டப்பாடசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பம்பாய் கிரிக்கெட்

## முன்னணியில் இலங்கை

புதுடில்லி, டிச. 20 இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கும் இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் பம்பாயில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் முதலாவது நாளான இன்று இலங்கைக் கோஷ்டி முன்னணியில் நின்றது.

இந்தியக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து 164ஓட்டங்களைப் பெற்றது. இலங்கைக் கோஷ்டி 2 விக்கெட் நஷ்டத்துக்கு 54 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை முடித்துக்கொண்டது.

கரையூர் சம்பவம்

## சந்தேகநபர் சரண்: 2-ம் திகதிவரை ரிமான்ட்

யாழ்ப்பாணம், ஞாயிறு கரையூர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் சம்பந்தமாகப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த ராஜப்பு செபஸ்தியான் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

இம்மாதம் 15-ந் திகதி கடலில் வைத்து சவரிமுத்து செபமாலை என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுகொலை செய்ததாக செபஸ்தியானைக் கைது செய்ய யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட்டினுல் உத்தரவிடப் பட்டிருந்தது.

வழக்கறிஞர் திரு. ஜிம்மி இராஜரத்தினம் மூலம் சரணடைந்த சந்தேக நபரை அடுத்த மாதம் 2-ந் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் ஜனுப் மொகமட் ஜமீல் உத்தரவிட்டார்.

கரையூர் பொலிசார் தொடர்ந்து விசாரணை நடந்தி வருகின்றனர்.

(கா. நி.)

### சிறுவர் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு களவாடிய பொருட்களுடன் வீதியில் வந்த இரண்டு சிறுவர்களை யாழ். பொலிஸார் பட்டப்பகலில் சந்தியொன்றில் வைத்துக்கைது செய்தனர். இந்தச்சம்பவம் நேற்று நடைபெற்றது.

சாவகச்சேரியிலுள்ள தேவாலய மொன்றிலிருந்து பெறுமதி வாய்ந்த மெழுகுதிரிகொளுத்தும் உபகரணங்களை சந்தேக நபர்கள் களவாடியதாகக் கூறப்படுகின்றது.

குற்றத்தடுப்புப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. ரி. தாமோதரமே சந்தேக நபர்களை களவாடிய பொருட்களுடன் ஆரியகுளம் சந்தியில் வைத்துக்கைது செய்தார்.

14வயதும், 18வயதுமுள்ள இரண்டு சிறுவர்களும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். (கா. நி)

யாழ் மாநகரசபை

## சோலைவரித் தீர்மானத்துக்கு 11 அங்கத்தவர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு தற்போது நடைமுறையிலுள்ள சோலைவரியையே அடுத்த ஆண்டுக்கும் யாழ்ப்பாண வரியிறுப்பாளர்கள் செலுத்த வேண்டும் என்ற யாழ்ப்பாண மாநகரசபைத் தீர்மானத்தை ஆட்சேபித்து சபையின் பதினெரு அங்கத்தவர்கள் மாநகர சபை கமிஷனருக்கு புகார் செய்துள்ளனர்.

இத்தீர்மானம் ஒரு அதிகப்படியான வாக்கினுல் கடந்த வாரம் நடையெற்ற சபையின் விசேஷ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்துக்கு 23 அங்கத்தவர்களில் இருவர் சமுகம் கொடுக்கவில்லை.

விசேட கூட்டத்தில் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்படாத மேற்படி பிரேரணை சபையின் அனுமதியுடன் கொண்டுவந்து மேயரின் ஒரு வாக்கினுல் நிறைவேற்றப்பட்டது இதன் பிரகாரம் 1969ம் ஆண்டு வரியையே 1970ம் ஆண்டிலும் அறவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

இதனை ஆட்சேபித்து திருவாளர்கள் அல்பிரட் துரையப்பா, கே வி தெய்வேந்திரம், ஏ ஜி ராஜசூரியர், எம் எஸ் பேரின்பநாயகம், தம்பு கந்தையா, கே எஸ் நடராசா, என் மார்க்கண்டு, ஏ விசுவநாதன், ஜனுப் ஜி எம் பஸீர் ஜனுப் எம் எஸ் ஏ காதர், எஸ் ஜே அன்ரனி ஆகிய பதினெரு அங்கத்தவர்களுமே கமிஷனர் திரு ஏ ரி சுந்தரத்துக்கு எழுத்து மூலம் அனுப்பிவைத்துள்ளனர்.

## 'அரசாங்க உதவியை நன்கு' பயன் படுத்துக'

பருத்தித்துறை, சனி "இந்நாட்டில் முன்னெப்பொழுதுமில்லாதவாறு விவசாயிகளுக்கு அரசாங்கம் உதவியளிக்கிறது. பசளை, விதைநெல், நிலம், கடன் வசதிகள் ஆகியன கொடுக்கிறது. இன்னும் சில காலத்தில் விவசாய உற்பத்திக்காக மின்சார வசதிகளும் கொடுக்கவிருக்கிறது. நீர்ப்பாசன வசதிகள் படிப்படியாகச் செய்துவைக்கப் படுகின்றன. இவ்வித உதவிகளை நன்கு பயன்படுத்தி உணவு, உற்பத்தியை அபிவிருத்தி செய்ய வேண்டியது கடமைஉணர்ச்சியும், தேசாபிமானமும் படைத்த ஒவ்வொருவரதும் கடமையாகும்."

இவ்வாறு வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன், காரியாலய மண்டபத்தில் நடைபெற்ற உபஉணவு அபிவிருத்தி மகாநாட்டில் தமது தலைமைப் பேருரையிற் கூறினுர்.

இம்மகாநாட்டில் வடமராட்சியிலுள்ள கிராமசேவகரும், 14 பயிர்ச் செய்கைப் குழுக்களும், விவசாயா போதனசிரியரும், நெற்பயிர்ச்செய்கை உத்தியோயோகத்தரும் கலந்துகொண்டனர்.

### மாணவர் தாக்கினராம்

கொழும்பு, சனி தேசிய உயர்கல்விச்சபை ரேயல் கமிஷன் ஊழியர்களை இன்று வித்தியோதய பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கியதாக அறிவிக்கப்பட்டது. மேற்படி ஊழியர்கள் காரில் சென்றுகொண்டிருந்தபோது பல்கலைக்கழக வளவுக்குள் இச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. காயமுற்ற இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர், கார் பலத்த சேதத்துக் குள்ளாகியதாம்,

### புதிய தலைவர்

யாழ்ப்பாணம், ஞாயிறு சங்கானைப் பட்டினசபையின் புதிய தலைவராக திரு. சி வயிரமுத்து நேற்று தெரிவுசெய்யப்பட்டார்.

(கா நி

## சோப்பாயில் கார் - பஸ் மோதல்

யாழ்ப்பாணம், ஞாயிறு இ. போ. ச. பஸ் ஒன்றும், கார் ஒன்றும் நேற்று நண்பகல் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் மோசமாக மோதுண்டு சேதமடைந்தன. இதனுல் படுகாயமடைந்த நால்வர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் உடனடியாக அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்த நால்வரில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிளாவார். மிகுதி மூவரில் இருவர் வங்கி ஊழியர்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்குச் சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸும், பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த காருமே கோப்பாயில் இவ்வாறு மோதுண்டன. குறிப்பிட்ட காரில் யாழ்ப்பாணம் கூட்டுறவு வங்கி ஊழியர் இருவர் பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்துக்குப் பணம் கொண்டு வரும்போதே விபத்து நடந்ததாம்.

இதனுல் காயமடைந்த யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் பெரேரா, வங்கி ஊழியர்களான ஜெகதீஸ்வரன் (42) தவராஜா (37) ஆகியோரும், கார்ச்சாரதியான சிவரத்தினம் (23) ஆகிய நால்வருமே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்த நால்வரும் அபாயகரமான நிலையில் இருப்பதாக ஆஸ்பத்திரிப் பொலிசார் தெரிவித்தனர்.

பஸ் சாரதி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். கோப்பாய் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (கா நி)

## 'மாணவர் கிளர்ச்சிக்கு எதிர்க்கட்சியே காரணம்'

—கல்வி அமைச்சர்

கொழும்பு சனி கல்விஅமைச்சர் இன்று ஆட்சிமன்றத்தில் பேசுகையில்உலகம்முழுவதும் மாணவர் கிளர்ச்சி தவிர்க்க முடியாததாக இருப்பதாகவும் இலங்கையில் எதிர்க்கட்சியினர் மாணவரை பிழையான வழியில் அழைத்துச் செல்லக் காரணமாயிருப்பதாகவும் குற்றம் சாட்டினுர்.

அரசாங்கம் தனது வருமானத்தின் ஆறில் ஒரு பங்கை அதாவது 50 கோடி ரூபாவை இலவச கல்வித் திட்டத்துக்கு விரயமாக்கிக் கொண்டிருப்பதை எதிர்க் கட்சியினர் உணரவேண்டும் என்றும் மாணவர்களை நல்ல வழியில் திருப்ப அவர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டுமென்றும் திரு ஈரியகொல்லை மேலும் கேட்டுக்கொண்டார்.

'பல்கலைக்கழக

## விஞ்ஞானபிரிவுக்கு ஆங்கிலம் தேவையில்லை'

—கல்வி அமைச்சர்

### ஆட்சிமன்றத்தில் அறிவிப்பு

கொழும்பு, சனி 'பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு அனுமதிபெறுவதற்கு ஆங்கில பாடம் தேவையில்லை. ஜி சி ஈ சாதாரண பரீட்சையில் ஆங்கிலத்தில் விசேட சித்தி அவசியமில்லை.'

இத்தகவலை இன்று ஆட்சிமன்றத்தில் கல்வியமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரிய கொல்லை தெரிவித்தார்.

ஆங்கில பாடத்தின் அவசியம் பற்றி உப-வேந்தர்கள் தம்மிடம் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவித்த கல்வியமைச்சர் இத்திட்டத்தை 1975ம் ஆண்டுக்குப் பின்னர் நடைமுறைக்குக் கொண்டு வரவிருப்பதாகக் கூறினுர். இவரது இத்திடீர் முடிவை எதிர்க்கட்சித் தலைவர்கள் பாராட்டிப் பேசினர். நாட்டின் சகல பகுதிகளுக்கும் இம்முடிவை உடனடியாக அறிவிக்கவேண்டுமெனக் கல்வியமைச்சரிடம் அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

கிராமப்புறங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சிபெறக் கஷ்டப்படுவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சுட்டிக் காட்டியதைக் கல்வியமைச்சர் ஏற்றுக்கொண்டமையைப் பாராட்டுவதாக எதிர்க்கட்சியினர் கூறினர்.

இன்று ஆட்சிமன்றத்தில் பிற்பகல் 5 30மணி தொடக்கம் 7-30 வரை கொழும்புப் பல்கலைக்கழகம், வித்தியோதயபல்கலைக்கழகம் மூடப்பட்டது சம்பந்தமாக எதிர்க் கட்சியினர் கண்டனம் தெரிவித்தனர்.

மாணவரின் கோரிக்கைகள் நியாயமானவை என்றும் அவற்றுக்குப் பரிகாரம் காணப்பட வேண்டுமேன்றும் திரு பீட்டர் கெனமன் கூறினுர் மாணவரின்வன்முறைச் செயல்களுக்கு மாணவர் பொறுப்பல்லவென்றும், பெற்ருேரே இதற்கு அடிப்படைக் காரணமென்றும் திரு. கொல்வின் . ஆர். டி சில்வா பேசுகையில் கூறினுர்.

இதுபற்றி நுணுக்கமாக ஆராய்ந்து மாணவர் கிளர்ச்சிகளை அரசாங்கம் தீர்க்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

### அவநம்பிக்கை பிரேரணை

கொழும்பு, சனி கல்வி அமைச்சர் திரு ஐ. எம் ஆர். ஏ. ஈரியகொல்லை மீது நம்பிக்கையில்லாப் பிரேரணைஒன்றைக்கொண்டு வருவதென எதிர்க்கட்சி பாராளுமன்றக்குழு இன்று முடிவு செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

தனிப்பட்ட சங்கக் கடை ஒன்றிற்கு விற்பனை செய்வதற்கு உரிய ஒருவர் தகுந்த நற்சாட்சிப் பத்திரத்துடன் மனுச்செய்யவும். மனேச்சர், வே. வைத்திலிங்கம், சிவன் ஸ்டோர்ஸ், மாங்குளம். 1722

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 21—12—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-00 திருவெம்பாவை, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம் 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வயலினிசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 துதிப்பாடல்கள், 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-20 கருத்தரங்கு, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.

## புத்தூர் வீனஸ் வெற்றி

பருத்தித்துறை, ஞாயிறு வதிரி தமிழ் மன்ற ஆதரவில் செல்வன் ஆ. கந்தசாமி ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புத்தூர் வீனஸ் கோஷ்டிக்கும், வல்வை பீ கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புத்

## அறிவித்தல்

### கூட்டுறவு வைத்திய சாலைச் சங்கம்

மூளாய், சுழிபுரம்.

மேற்படி சங்கம் தங்கள் ஊழியரின் சம்பளத் திட்டத்தை திருத்தி அமைப்பதற்காக ஓர் சம்பள நிர்ணய சபையை நியமித்திருக்கிறது. இவ்விடயமாக மேற்படி சபைக்கு எழுத்து மூலமோ நேரிலோ சாட்சியம் கொடுக்க விரும்பும் சங்க அங்கத்தவர்கள் கௌரவ காரியதரிசிக்கு 31-12-69க்கு முன் எழுத்து மூலம் அறிவிக்கும்படி தயவாக வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

ச. க. தர்மலிங்கம்,
கௌரவ காரியதரிசி.
1889

## தொ. நு. கல்லூரி தமிழ்மன்ற நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ் மன்றத்தின், வருடாந்த பொதுக் கூட்டத்தில், புதிய கல்வியாண்டிற்கான உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. ந. இராஜரத்தினம் (அதிபர்), உபபோஷகர்கள்: திரு. பொ. சங்கரப்பிள்ளை, திரு. சி. மாணிக்கவாசகர் (விரிவுரையாளர்கள்). தலைவர்: திரு பா. பாலபாஸ்கரன், உபதலைவர்: திரு. வீ. சி. க. கிருஷ்ணன், செயலாளர்: திரு. அ. சொர்ணலிங்கம், உபசெயலாளர்: செல்வி. ஆ. ராஜேஸ்வரி. பத்திராதிபர்: திரு. வே. ஜெ போல். உபபத்திராதிபர்: திரு. த. குணரத்தினம். பொருளாளர்: திரு. த. குலசேகரம்பிள்ளை. இலக்கியச் காரியதரிசி: திரு. ரா. சிறீரங்கநாதன்.

செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள். நா. சிவநாதன், மு. நமசிவாயம்பிள்ளை, த. செல்வரத்தினம், அ. திருவிளங்கம், க. ஹம்சா, செல்விகள். இ. சோபனா, மு. பரீனா க. யோகேஸ்வரி, அ. தெய்வநாயகி, ஜெ. ரமணி.


MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 &9-45, p.m
Poya Prepoya 10-30 a.m.
Gian Maria Volonte
Margaret Lee
in
THE VIOLENT FOUR
(Scope-color)


யாழ். நகரில்

# எந்தமாகாணமும் கண்டிராத மாபெரும் உதைபந்தாட்டம் மேயர் வெற்றிக் கிண்ணம் யாருக்கு?

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். உதைபந்தாட்டச் சங்கம், இலங்கையில் இதுவரை எந்த ஒரு மாவட்ட விளையாட்டுச் சங்கங்களும் இதுவரை நடத்தாத "அகில இலங்கை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி" ஒன்றை அடுத்த வருட முற்பகுதியில் நடாத்தவிருக்கின்றது.

இந்தச் சுற்றுப் போட்டிக்கான வெற்றிக் கிண்ணத்தை யாழ். மாநகரசபை மேயர் வழங்க முன்வந்துள்ளார். இந்த வெற்றிக் கிண்ணம் மிகவும் விலையுயர்ந்ததாகவும், யாழ்ப்பாண கலாச்சாரத்துக்கு ஒத்தவாறு தயாரிக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில், இலங்கையின் எல்லாப் பாகங்களிலுமிருந்து முன்னணி வகிக்கும் கழகங்கள் அனைத்தும் பங்குபற்றவிருக்கின்றன. கொழும்பிலிருந்து பிரசித்தி வாய்ந்த கழகங்களான 'சவுண்டஸ்' விளையாட்டுக் கழகம், 'இரத்தினம்' விளையாட்டுக் கழகம், 'அகில இலங்கை பொலிஸ்' கோஷ்டி, 'விக்றறிஸ்' விளையாட்டுக் கழகம், 'சன்றைஸ்' விளையாட்டுக் கழகம், 'மொஸாயீஸ்' விளையாட்டுக் கழகம் ஆகியனவும், திருமலையிலிருந்து 'சன்றைஸ்' விளையாட்டுக் கழகம், 'ஒலிம்பிக்ஸ்' விளையாட்டுக் கழகம், 'கிறீன்லேட்' விளையாட்டுக் கழகம் ஆகியனவும், மட்டுநகரிலிருந்து 'பாடும்மீன்' விளையாட்டுக் கழகம், 'மைக்கல்மன்' விளையாட்டுக் கழகம், 'பறங்கியர்' விளையாட்டுக் கழகம், போன்றனவும், அநுராதபுரத்திலிருந்து 'அனுராஜன்' விளையாட்டுக் கழகம் ஆகியனவும் இன்னும் மலைநாட்டுப் பகுதிகளிலிருந்தும் மற்றைய பகுதிகளிலிருந்தும் முன்னணிக் கழகங்கள் பங்குபற்றலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றன. இவைகளைவிட யாழ். மாவட்டத்தில் முன்னணி வகிக்கும் கழகங்களும் இச் சுற்றுப் போட்டியில் பங்கு கொள்ளவிருக்கின்றன.

இச் சுற்றுப் போட்டியை மிகவும் விரிவான முறையிலும், ஒழுங்காகவும் நடாத்துவதற்காகவும், வெளியிடங்களிலிருந்து வரும் கழக வீரர்கள் வசதியாக தங்குவதற்கும், இச்சுற்றுப் போட்டிக்கான மற்றைய விடயங்கள் பற்றியும் தற்போது யாழ். உதைபந்தாட்டச் சங்கக் குழு ஆராய்ந்து வருவதாக, யாழ். உதைபந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. ஸி பாலசுப்பிரமணியம் நமது நிருபரிடம் தெரிவித்தார். (தே. நி)

## பெற்றூர் அதிருப்தி

பருத்தித்துறை. சனி

550 மாணவரைக்கொண்ட

## 'தமிழில் ஒலிபரப்ப வழி செய்ய வேண்டும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

அவுஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே சென்னையில் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் போட்டிகளின் இறுதி ஆட்டவானொலி நேர்முக வர்ணனையை தமிழில் ஒலிபரப்ப வழிசெய்யுமாறு யாழ்ப்பாணம் மாணவ தூயதமிழ் இயக்கத்தின் சார்பில் திரு. த. ஜுன்பரசு தமிழக முதலமைச்சரைக் கேட்டுள்ளார்.

திரு இளபரசு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:—

தாங்கள் தமிழர் வாழ்வின் தேவைகள் அனைத்திலும் தமிழ்மொழியைப் புகுத்துவதில் காட்டிவரும் ஆர்வத்தையும், தீவிரத்தையும் மெச்சுகிறோம்; பாராட்டுகிறோம்.

அதேபோல் விளையாட்டுத் துறைகளிலும் தமிழ் புகுத்தப்படவேண்டுமென அவாவுகிறோம். விளையாட்டுத்துறைகளில் வழங்கும் ஆங்கிலப் பதங்களுக்கு நேரான தூய தமிழ்ச்சொற்கள் தெரியப்படவேண்டும். அவற்றைப் பொதுமக்களும், விளையாட்டுப்பிரியர்களும் அறிந்து பயனடைய ஊக்கம் கொடுக்கப்படவேண்டும்.

எதிர்வரும் 25-12-69-ல் ஆர... மாகவிருக்கும், இந்தியா...கும்- அவுஸ்திரேலியாவுக்குமிடையிலான கிரிக்கட் தொடர்ப் போட்டிகளின் இறுதி ஆட்டத்தை அதற்கு பயன்... யா... தங்... பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறது

மேற்படி ஆட்டம் பற்றிய வானொலி நேர்முக வர்ணனைகளை தமிழக வானொலி நிலையங்கள் தமிழில் ஒலிபரப்ப ஒழுங்கு செய்வீர்களாகில் மகிழ்ச்சியடைவோம்.

இருபெரும்கிரிக்கெட்நாடுகளான அவுஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெறும் பெரும் போட்டி ஆட்ட வர்ணனைகளை தமிழ்மக்களுக்குதமிழில் வழங்குங்கள்.

இவ்விதம் செய்வதால் தமிழ் மக்களிடையே தமிழ் ஆர்வத்தை வளர்ப்பதோடு தமிழ் இளைஞர்கள் மத்தியில் கிரிக்கெட் ஆட்டத்தின் பிடிப்பையும் ஏற்படுத்த முடியும். இதன்மூலம் விளையாட்டுத்துறை நேர்முகவர்ணனைகளுக்குதமிழ் ஏற்றமொழிஅல்ல என்ற தப்பான கருத்தையும் போக்கமுடியும்.

சென்னை ஆட்டத்தின் வானொலி நேர்முக வர்ணனைகளைத் தமிழில் ஒலிபரப்ப ஒழுங்குசெய்யப்படும்பட்சத்தில் அது குறித்த அறிவித்தல்களை முன் கூட்டியேதெரிவிப்பீர்களாகில் கடல் கடந்த நாடுகளில் வாழும்தமிழர்களும் அவ் ஒலிபரப்பை கேட்டு இன்புறுவார்கள்.

...... [தே. நி.]

## பெற்றூர் கவ...

நாவலப்பிட்டி, வெள்ளி

இப் பகுதியில் உள்ள பிள்ளைகளை அரசாங்க பாடசாலையில் சேர்ப்பதற்குநாவலப்பிட்டிப் பகுதி பொது மக்களும் தோட்டத் ... ... வாளர்களும் பெரிதும் கவ...

## 'மினி' தேர்தல் முடிவடைகிறது

கோட்டை, சனி

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் அடுத்த சில நாட்களில் நடைபெறவிருக்கும் 16 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலோடு முடிவடைகிறது.

மாத்தளை, கொலனுவை மாத்தறை மொறட்டுவா, அம்பலாங்கொடை, அட்டன்-டிக்கோயா, நாவலப்பிட்டியா, கல்முனையாகிய பகுதிகளில் கடும் போட்டி ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது

இம் மினி தேர்தல் சம்பந்தமாக ஆலோசனைகள் நடாத்துவதற்கு அரசாங்க கட்சி ஆட்சிமன்ற அங்கத்தவர்களும் எதிர்க்கட்சிஆட்சிமன்ற அங்கத்தவர்களும் கூட்டம் நடாத்தியுள்ளனர்.

## விதைகிழங்கு இல்லை

நுவரெலியா. சனி

இப்பகுதியிலுள்ள கடனைத் திருப்பிக் கொடுக்காத விவசாயிகளுக்கு அரசாங்கம் விதை உருளைக் கிழங்கை வழங்கமாட்டாது

இப்பகுதி அரசாங்க அதிபர் திரு பி எம் விஜயகோன் தலைமையில் நுவரெலியா கச்சேரியில் நடைபெற்ற மகாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு என் ரி ஆரியரத்தின, இம் மகாநாட்டில் தான் ஏற்கனவே விதை கிழங்கு பெற இயலாத அரசாங்கக் கடனைத் திருப்பிக் கொடாத விவசாயிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலை அரசாங்க அதிபருக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். ......

## பிரதான பாதை இல்லை

நாவலப்பிட்டி, சனி

நாவலப்பிட்டியிலுள்ள

## 'இளம் சிறுர்கள் மனதில் நற்கருத்துககள் விதைக்கப் படவேண்டும்'

சுழிபுரம், சனி

"வாழ்வுக்கு வேண்டிய ஒழுங்கை நிலைநாட்டுவதே சமயம். சமயக்கருத்தை எல்லோர்மனதிலும் பதியவைப்பதற்கு பல்வகையான வழிகள் கையாளப்படுகின்றன. கேள்வி பதில்கள், பிரசங்கங்கள், சொற்பொழிவுகள் ஆகிய முறைகள் மூலமும் சமய அறிவு பரப்பப்படுகிறது"

இவ்வாறு வழக்கம்பரை சன சமூக நிலைய பஜனைச் சபையினர் நடத்திய சமய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி உரையாற்றிய பிரம்மஸ்ரீ ச. வைத்தீஸ்வரசர்மா குறிப்பிட்டார்.

வழக்கம்பரை அம்மன் கோவில்மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. க. வாமதேவன் தலைமை தாங்கினார்

பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வர சர்மா மேலும் பேசுகையில் கூறியதாவது: 'இளம் சிறுர்கள் மனதில் நல்ல கருத்துக்களை விதைக்க சமய ஸ்தாபனங்கள் முன்வரவேண்டும். போட்டிகள் நடத்துவதன் மூலமும், சமய நூல்கள் வெளியிடுவதன் மூலமும் சமயக் கருத்துக்களுக்கமைய கருமங்கள் செய்வதன் மூலமும் இவ்விதம் செய்யலாம்.'

தலைமையுரையில் திரு. வாமதேவன் கூறியதாவது: நல்லன எண்ணி நல்லவற்றை செய்யவேண்டும். இவ்விதம் செய்யும் பொது இயக்கங்கள் இப்போது குறைந்துவருகின்றன. இந்த சூழ்நிலையில் பல கஷ்டங்களையும் பொருட்படுத்தாது சேவையாற்ற முன்வந்த வழக்கம்பரை பஜனைச்சபையினர் பாராட்டப்படவேண்டியவர்கள்

திரு. சி. வெங்கடாசலபதி பேசுகையில், இளம் உள்ளங்களில் நல்ல எண்ணங்கள் உதயமாகவேண்டும் என்பதற்காகவே போட்டிகள் நடத்தப்படுகின்றன என்று கூறி போட்டியை நடத்த உதவியயாவருக்கும் நன்றி தெரிவித்தார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரம்மஸ்ரீ வைத்தீஸ்வரசர்மா பரிசில்களை வழங்கினார்.

## கிழக்கிலங்கை பட்டதாரிகளே நியமிக்கப்பட வேண்டும்

### கி. மா. த. ஆசிரியசங்கத்தின்கோரிக்கை

அம்பாறை, சனி

பிரதேச ரீதியாக பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கவேண்டும். கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர்கள் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்பும் பொழுது இம்மாகாணத்தில் வேலையின்றியிருக்கும் பட்டதாரிகளுக்கே நியமனங்கள் வழங்கப்பட வேண்டுமெனக் கல்வியமைச்சைக் கோருவதென அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் ஏகமனதாக முடிவுசெய்துள்ளது.

இங்கு வேலையற்றிருக்கும் பட்டதாரிகளிற் பலர் கிராமப்புறங்களிலுள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு இவர்கள் பகுதியிலேயே ஆசிரியர் நியமனங்களை வழங்கினால் இவர்களது வேலையில்லாப் பிரச்னை நீங்குவதோடு கிராமப்புறங்களில் கல்வி வளர்ச்சியும் ஏற்படும். கிழக்கு மாகாணம் பின்தங்கிய பகுதியாதலால் அப்பகுதியின் முன்னேற்றத்திற்கு அப்பகுதிப் பட்டதாரிகளை அப்பகுதிகளில் ஆசிரியர்களாக நியமித்தால் பின்தங்கியநிலை மாறலாம். இப்பகுதியில் உள்ள அநேகமான பாடசாலைகளுக்குப் பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர் என மேற்படி சங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது.

மேலும் இச்சங்கம் அதிபர்கள் தலைமை ஆசிரியர்கள் நியமனவிடயமாகவும் கல்வியமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்த ஆலோசனை செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில்

## பொலிஸ் கிறிஸ்மஸ் விழா நாளை முதல் 3 நாட்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு கத்தோலிக்க கிறிஸ்தவ

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

றிக்கேடயத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புத்தூர் வீனஸ் கோஷ்டிக்கும், வல்வை பீ கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் புத்தூர்க் கோஷ்டி 11-0 கோல்களால் பாராட்டப்படக்கூடிய முறையில் வெற்றியீட்டியது.

திரு. எஸ். இராஜேஸ்வரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.


JAFFNA

Daily 4-45, 7 &9-45, p.m

Poya Prepoya 10-30 a.m.

Gian Maria Volonte

Margaret Lee

in

THE VIOLENT FOUR

(Scope -color)

These four men are on their way to do a day's work robbing dank killing peoples


முன்னணிக் கழகங்கள் பங்கு பற்றலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றன. இவைகளை

## பெற்ருர் அதிருப்தி

பருத்தித்துறை, சனி

550 மாணவரைக்கொண்ட கரவெட்டி மாணிக்கவாசகர் வித்யாலயத்தில்போதிய இடவசதியும், தளபாடங்களும் இல்லாமையால் ஆசிரியரும் மாணவரும் அதிக வ சதியீனத்திற்குள்ளாக்கப்பட்டிருப்பதாகத்தெரிகிறது மேலும் ஆசிரியர் பற்ருக்குறையும் நிலவுகிறதாம். இக்குறைபாடுகள் பற்றிப் பெற்றேர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

...வுக்குமிடையிலான கிரிக்கட் தொடர்ப் போட்டிகளின் இறுதி ஆட்டத்தை அதற்கு பயன்படுத்துமாறு இலங்கை மா... தூயதமிழ் இயக்கம் தங்... பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறது

நாவலப்பிட்டி, வெள்ளி

இப் பகுதியில் உள்ள பிள்ளைகளை அரசாங்க பாடசாலையில் சேர்ப்பதற்குநாவலப்பிட்டிப் பகுதி பொது மக்களும் தோட்டத் தொழி... லாளர்களும் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 6-ம் திகதி [21-12-69]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்**- செலவினங்களைச் சமாளிக்கமுடிமாமல் திண்டாடுவீர்கள். எதிலும் அதிக சோர்வு தென்படும் தொழில்துறையில் அதிருப்தி நிலவும். இனபந்துக்கள் மத்தியில் அபிப்பிராயபேதங்கள் தோன்றிமறையும்.

**ரிஷபம்**- இன்று கைவிட்டுப்போன பொருள் மீண்டும் வந்து சேரமுடியாது. போக்குவரத்துக்களில் அதிக கவனம் செலுத்தவும். முதியவர் ஒருவரின் முணுமுணுப்பு குடும்பத்தில் குமைச்சலை அதிகரிக்கும். அமைதி விரும்பத்தக்கது.

**மிதுனம்**- பொருளீட்டும்துறையில் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம். அயலவர்களின் அன்பு உங்களைப் பரவசப்படுத்தும். குடும்பவாழ்க்கையில் சமரசம் நிலவும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் பெருமதிப்புக் கொடுப்பர்.

**கடகம்**- பிரச்னைகள் பலவந்து குவியும். எதிலும் நல்ல முடிவை எடுக்கமுடியாது திகைப்பீர்கள். சகோதரி ஒருவரின் உடல்நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுகளுக்கும் இடமுண்டு. இறைவழிபாடு நன்மையைத் தரும்.

**சிம்மம்**- எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி காணப்படுகின்றது. மாணவர்களாயின் முன்னேறும் வாய்ப்புக் கிடைக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு நண்பர்களின் உதவியும் அவசியம் உண்டு.

**கன்னி**- உடல்நலத்தில் துரிதமுன்னேற்றம் காணப்படுகின்றது. சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள். புதிய முயற்சிகளில் ஆர்வம்பிறக்கும். பூமியாலும் அதிக பொருள்வரவுக்கு இடமேற்படமுடியும். சுபதினம்.

**துலாம்**- வேவுக்கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பார்கள். எல்லாவிடயங்களிலும் உஷார்நிலையில் இருக்கவும். தொற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்களுடன் தொடர்புகொள்ளவேண்டாம். நிதானம் வேண்டும்.

**விருச்சிகம்**- இன்பம் உங்களைத் தாலாட்டும். புதிய உறவுமுறைகளால் மகிழ்ச்சிஅடைவீர்கள். எதிர்பார்த்த கடிதமொன்று கிடைப்பதன் மூலம் இதயம் பூரிப்பால் விம்மும். குடும்பத்தில் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு.

**தனுசு**- கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றமுடியாமல் வேதனைப்படுவீர்கள். மற்றவர்களின் ஏழனப் பார்வைக்கு இலக்காகலாம். பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மௌனம் விரும்பத்தக்கது.

**மகரம்**- பொதுத்துறைகளில் உங்கள் செல்வாக்குப் பிரகாசிக்கும். பொதுமக்களின் ஆதரவு வளர்வதற்கு இடமுண்டு. முன்னுள் ஆசிரியர் ஒருவர் உங்கள் முன்னேற்றத்துக்கு உதவுவார்.

**கும்பம்**- செய்தொழிலால் சிறப்படைவதற்கு இடமுண்டு. புதிய கண்டுபிடிப்புக்களும் இடம்பெறும். பொறியியலாளர்களுக்கு சிறப்பானதினம். சிலருக்கு அரசினர் விருதும் கிடைக்கலாம். தொடர்புகளிலும் திருப்தியுண்டு.

**மீனம்**- முதல்விட்டுச்செய்யும் தொழில் அதிக இலாபத்தைத் தரலாம். வணிகத்துறையில் அதிக முன்னேற்றம்காணப்படுகின்றது. பிள்ளையொன்றின் படிப்புக்காகப் பணம் செலவாகலாம். விருந்துவைபவத்துக்கும் இடமுண்டு.

...துள்ளார். ......

## பிரதான பாதை இல்லை

நாவலப்பிட்டி, சனி

நாவலப்பிட்டியிலுள்ள சேலம் பிறிட்ஜ் கிராமத்திற்கு பிரதான பாதை ஒன்று இல்லாமல் பொது மக்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர். இது சம்பந்தமாக சேலம் பிறிட்ஜ் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் நாவலப்பிட்டிக் காரியாதிகாரியுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

## கவிதைநூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கவிஞர் தில்லைச் சிவனின் 'தாய்' கவிதைத் தொகுதி இம்மாதம் 23-ம் திகதி மாலை யாழ்ப்பாணத்தில் வெளியிடப் படவிருக்கிறது. திரு. து. பத்மநாதன் தலைமையில் மலாயா கபே மேல்மாடியில் நடைபெறும் இவ்விழாவில் 'புதுமை லோலன்' வரவேற்புரை வழங்க, இரசிகமணிகனக, செந்திநாதன் நூலை வெளியிட்டு உரை நிகழ்த்துவார். திரு. த. சண்முகலிங்கம் முதற்பிரதியைப் பெறுவார்.

சி. சரவணபவன் (சிற்பி), தேவன்-யாழ்ப்பாணம், யாழ்வாணன் ஆகியோர் நயப்புரையும். திரு. கா. பொ. இரத்தினம் எம். பி, திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. ஆகியோர் பாராட்டுரையும் வழங்குவர். இசைமணி சு. நமசிவாயம் பா ஓதுவார்.

## மாணவர் இருவருக்கு தடை

கண்டி, சனி

கலைத்துறை மாணவர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்வது சம்பந்தமாக சிரேஷ்ட மாணவர்களுக்கும் இரண்டாம் வருட மாணவர்களுக்கும் இடையே குழப்பம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழக கலைத்துறையைச் சேர்ந்த இரு சிரேஷ்ட மாணவர் பல்கலைக்கழகம் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழப்பத்தில்மாணவர் ஒருவருக்கு தலையிலும், மூக்கிலும் காயங்கள் ஏற்பட்டு பல்கலைக்கழக வைத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தடை விதிக்கப்பட்ட இரு சிரேஷ்ட மாணவர்களுக்கும் பல்கலைக்கழக விடுதியிலிருந்து வெளியேறுமாறும் உத்தரவுவிடப்பட்டுள்ளது.

## பொலிஸ் கிறிஸ்மஸ் விழா நாளை முதல் 3 நாட்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பொலிசாரால் கொண்டாடப்படும் கிறிஸ்மஸ் வாரக் கொண்டாட்டங்கள் நாளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் இவ்விழா தொடர்ந்து 24-ம் திகதி வரை மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

முதல் நாளான நாளைய விழாவில் சமயக்குருமாரின் சொற்பொழிவுகளும், வட பகுதி வடபகுதியிலுள்ள பதினொரு பாடசாலைகளும், கத்தோலிக்க கிறிஸ்தவ மன்றங்களும் கலந்துகொள்ளும் மெழுகுவர்த்தி வெளிச்சத்திலான சோபன கீதங்கள் நடைபெறும்.

இரண்டாம் நாள்விழாவில் நத்தார் சுபசோபனப் பாடல்களும். ஒன்பது சங்கங்கள் அளிக்கும் நாடகம், வாத்திய இசை ஆகியனவும் வாணவேடிக்கைகளும்இடம் பெறும்.

கடைசி நாள் விழாவில் ஏழு தமிழ், ஆங்கில நத்தார் படக்காட்சி நடைபெறும்.

(கா. நி.)


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி - சரோஜாதேவி எஸ்.எஸ்.ஆர்.-ராஜசுலோஜனு நடித்த

குலவிளக்கு

3வது வெற்றி வாரம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

பிரிபோயா, போயா 4 காட்சிகள்

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]

ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★சிவாஜி ★பத்மினி

★ஜெமினி ★சாவித்திரி

★முத்துராமன் ★கே ஆர்.விஜயா

★நாகேஷ் ★மனேரமா

நடித்த

திருவருட் செல்வர்

[ஈஸ்ட்மென் கலர்]

ஸ்ரீகாலிங்கன்

இணுவில்

தினசரி 3 காட்சிகள்

எம் ஜி ஆர் - ஜெயலலிதா நடித்த

இரகசியப் பொலிஸ்-115

வல்வெட்டித்துறை

றஞ்சனு தியேட்டர்

தினசரி: 6-30, 9-30

போயா, பிரிபோயா 3 காட்சிகள்

ஜெமினி - சாவித்திரி நடித்த

களத்தூர் கண்ணம்மா

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்

கிருஷ்ணு - கே. ஆர். விஜயா வாணிஸ்ரீ நடித்த

மாஸ்டர் மதருஸ்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் சௌகார் ஜானகி, வாணிஸ்ரீ நடித்த

குழந்தைஉள்ளம்

வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 9-30

பிரிபோயா, போயா 2-30மணி

எம். ஜி. ஆர்-சரோஜாதேவி நடித்த

படகோட்டி

(ஈஸ்மென்கலர்)

REGAL JAFFNA

Daily 4-45, 7, & 9-45 p.m

Sean Connery, Karin D'Or

in

YOU ONLY LIVE TWICE

வெளிவந்துவிட்டது!

1970

"ஈழநாடு" தினக் குறிப்பு

விலை: ரூ. 1-35 சதம்

"ஈழநாடு" Pocket Diary

விலை: -75 சதம்

ஏராளமான தகவல்கள்!

நவீன அமைப்பு!!

எமது பத்திரிகை விற்பனையாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா பாஸிஸபாதையில் போகிறதாம்

## காங்கிரஸ் மாநாட்டில் நிஜலிங்கப்பா தலைமையுரை

ஆமதாபாத், டிச. 20

திரு. நிஜலிங்கப்பா தலைமையிலான அகில இந்திய காங்கிரஸின் மகாநாடு இன்று காலை ஆமதாபாத்துக்கு அருகில் காந்தி நகரில் ஆரம்பமானது. கட்சிக் கொடியை ஏற்றிவைத்தபின் திரு. நிஜலிங்கப்பா தலைமையுரை நிகழ்த்தினார்.

''மிகவும் நெருக்கடியான கட்டத்தில் இங்குகூடியிருக்கிறோம். காங்கிரஸின் எதிர்காலம், நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்திக்கவேண்டிய நிலையிருக்கிறோம்'' என்று திரு நிஜலிங்கப்பா தமது தலைமையுரையைத் தொடங்கினார்.

நாட்டில்ஒழுங்கீனம் பரவி வருகிறதென்றும் இது காங்கிரசுக்குள்ளும் தலையெடுத்து ஸ்தாபனத்தையே சீர்குலைக்கும் நிலைக்குவந்ததென்றும் இது கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதென்றும் அவர் சொன்னார்.

''காங்கிரஸிலிருந்து சிலர் வெளியே போய்விட்டார்கள். கொள்கை, இலட்சிய வேறுபாடுகாரணமாக அவர்கள் போகவில்லை. தனிப்பட்ட சொந்த நோக்கங்களினால் அவர்கள் வெளியேறியிருக்கிறார்கள்'' என்று திரு நிஜலிங்கப்பாகூறினார்.

பாஸிஸப்பாதையில் நாடு போய்க்கொண்டிருக்கிறதென்றும் அவர் சொன்னார். காங்கிரஸிலிருந்து சிலர் வெளியேறிவிட்டதால் இப்பொழுது காங்கிரஸ் ஸ்தாபனம் தூய்மையடைந்துள்ளதென்று அவர் கூறினார்.

நாட்டுக்கு விடுதலைபெற்றுக்கொடுத்த தேசபிதா மகாத்மாகாந்தியும் வீரர் வல்லபாய்பட்டேலும் பிறந்தஆமதாபாத்தில் காங்கிரஸ் மகாநாடு நடைபெறுவது மிகவும் பொருத்தம் என்றும் திரு. நிஜலிங்கப்பா கூறினார்.

இந்த மகாநாட்டில் மத்திய மந்திரிகள் எவரும் கலந்து கொள்ளவில்லை. சில முதன் மந்திரிகள் கலந்துகொண்டனர்.

## உகண்டா ஜனாதிபதி சுடப்பட்டார்

கம்பாலா, டிச 20

உகண்டா ஜனாதிபதி டாக்டர் ஒபோட்டேயைக் கொலை செய்ய முயற்சி நடைபெற்றிருக்கிறது. காயங்களுடன் அவர் தப்பினார்.

உகண்டாவின் ஆளும்கட்சியான உகண்டா மக்கள் காங்கிரஸின் வருடாந்த மகாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு வெளியே வருகையில் இனந்தெரியாத ஒருவன் இருட்டில் மறைந்து நின்று ஒபோட்டேயை நோக்கி மூன்று தடவைகள் ரிவால்வரால் சுட்டான். காயமடைந்த ஒபோட்டே உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். சுட்டவன் ரிவால்வருடன் கைது

ஒபோட்டே 1962-ம் ஆண்டிலிருந்து 1966ம் ஆண்டு வரை உகண்டாவின் பிரதமமந்திரியாகவும் 1966ம் ஆண்டிலிருந்து ஜனாதிபதியாகவும் கடமையாற்றி வருகிறார்.

டாக்டர்ஒபோட்டே காயமடைந்தாலும் அவரது நிலைமை குறித்து அஞ்சுவதற்கில்லையென்று உகண்டா அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

ஒபோட்டே சுடப்படுவதற்கு முன்னர் இடதுசாரி சோஷலிஸத்தைப்பின் பற்றுவதென்று கட்சி மகாநாடு தீர்மானித்ததுடன் ஒரு கட்சி ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்காக அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு டாக்டர் ஒபோட்

கொழும்பில்

### மருந்துவ நிலையம் நிறுவப்படும்

கோட்டை, சனி

மருந்துவகைகளைப்பிற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதைக்குறைத்து நமது நாட்டுக்குத் தேவையான மருந்துகளை இங்கு தயாரிப்பதற்கு மருந்து ஆராய்ச்சி நிலையமொன்றை ஜப்பானின் உதவியோடு நிறுவ அரசாங்கம்தீர்மானித்துள்ளது. இவ்வாராய்ச்சி நிலையம் கொழும்பில் நிறுவப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இவ்வாராய்ச்சி நிலையத்திற்கு வேண்டிய கருவிகளையும் உபகரணங்களையும் ஜப்பானிய அரசாங்கம் வழங்கவிருக்கிறது இதுமட்டுமன்றி மருந்துகள் தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்திறனை இலங்கையருக்குக் கற்றுக்கொடுக்க ஜப்பானிலிருந்து மருத்துவ நிபுணர் குழுவொன்றும் இங்கு வரவிருக்கிறது. இத்துடன் இலங்கை மருத்துவ நிபுணர்களும் ஜப்பான் சென்று கருவிகளைப் பயன்படுத்தும் முறை, அவற்றின் செயற்திறமை ஆகியன பற்றி பயிற்சி பெறவுள்ளார்கள். இதற்கான ஒப்பந்தம் ஒன்றை அண்மையில் செளகிய அமைச்சு ஜப்பான் அரசாங்கத்துடன்செய்துள்ளது.

— —

### வர்த்தக மகாநாடு

கோட்டை, சனி

அடுத்தாண்டு பெப்ரவரி மாதத்தில் வர்த்தக கழக மகாநாடொன்றை கொழும்பில் நடாத்தத்தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேசிய கைத்தொழில் கழகம், அகில இலங்கை வர்த்தகக்கழகம், மேர்கண்டைல் கழகம், வர்த்தகக் கழகம், தேசிய மேர்கண்டைல் கழகம் ஆகிய கழகங்கள் இம்மகாநாட்டில் பங்கு பற்றவுள்ளன இம்மகாநாட்

### தபால்—தந்தி ஊழியர் வேலைநிறுத்த முயற்சி

கோட்டை, சனி

தபால் தந்தி திணைக்களத்தில் கடமையாற்றும் 8 மொனிட்டர்களது இடமாற்றங்களை போஸ்ட்மாஸ்ட்டர் ஜெனரல் திரு. வேர்ணன் அபயசேகரா நிறுத்தியுள்ளார்.

இவர்கள் தமது நிலைகளை விளக்கியதைத்தொடர்ந்தே அவர் இவ்விதம் இடமாற்றங்களை நிறுத்தியுள்ளார்.

தமது இடமாற்றத்தை நிறுத்தக்கோரிய ஒருவரது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

இதற்கிடையில்இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்ட மொனிட்டர்களது இடமாற்றங்கள் நிறுத்தப்படாவிட்டால் தாம் பொதுவேலை நிறுத்தம் செய்யப்போவதாக தபால் தந்தி ஊழியர்கள் சங்க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். தமது கோரிக்கை சம்பந்தமாக பிரதமரிடமிருந்து எதுவித பதிலும் கிடைக்கவில்லையென்றும் பதில்கிடைத்த பின்பே இது பற்றி முடிவெடுக்கப்படுமென்றும் அவர் மேலும் கூறினார்.

— —

### புதிய நிர்வாகிகள்

திருக்கோணமலை, சனி

இராச இலங்கைக் கடற்படை சிவில் ஊழியர் கூட்டுறவு கடன் வசதிச் சேமிப்புச் சங்கத்தின் நான்காவது வருடாந்தப் பொதுக் கூட்டம் திருக்கோணமலை இராச இலங்கைக் கடற்படை திரைப்பட மாளிகையில் நடைபெற்றது. கீழ்க்காணும் உத்தியோகஸ்தர்கள் அடுத்த நிதிவருடத்திற்கு ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. எஸ் பொன்னம்பலம் தலைவர், திரு வி எஸ் அழகுராசா உப தலைவர். திரு எம் ஏ அரியகுட்டி செயலாளர், திரு என் பொன்னுத்துரை தனாதிகாரி

ஐந்துபேர்கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# சீனாவுடன் அமெரிக்கர் வர்த்தகம் செய்யலாம்

## கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன

வாஷிங்டன், டிச. 20

நவசீனாவுடன் வர்த்தகம் செய்து கொள்வதற்கு இது வரை இருந்துவந்த கட்டுப்பாடுகளை அமெரிக்கா தளர்த்தியிருக்கிறது.

அமெரிக்க உல்லாசப் பிரயாணிகள் தங்கள் உபயோகத்துக்கு நூறு டாலருக்கு மேற்படாத பெறுமானமுடைய சீனப் பொருள்களைத்தான் வாங்கலாம் என்ற கட்டுப்பாடும் நீக்கப்பட்டுவிட்டது

போர் முக்கியத்துவமல்லாத பொருள்களை வெளிநாடுகளிலுள்ள விநியோகத்தர்கள்மூலம் அமெரிக்க நிறுவனங்கள் சீனாவுக்கு விற்பனை செய்யலாமென்று அமெரிக்க ராஜாங்க இலாகா அறிவித்திருக்கிறது.

சீனாவுடன் வர்த்தகம் செய்து கொள்வதற்கு இது வரை இருந்துவந்த கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதென்ற இராஜாங்க இலாகாவின் முடிவு ஒருதலைப்பட்சமாக மேற்கொள்ளப்பட்டதுதானென்றும் வார்சோவில் சமீபத்தில் சீன அமெரிக்கத் தூதர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்கும் இதற்கும் தொடர்பில்லையென்றும் ராஜாங்க இலாகா அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### த. கா. வாலிப முன்னணி புத்தூர்க் கிளை

புத்தூர், சனி

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியின் புத்தூர்க்கிளைக்கூட்டம் அதன் தற்காலிக தலைவர் திரு. பெ. மாணிக்கவாசகர் தலைமையில் புத்தூர் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருடத்திற்கான உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: திரு. மு. திருநாவுக்கரசு, செயலாளர்: திரு. பெ. மாணிக்கவாசகர், தனாதிகாரி: திரு. ந. தில்லைசிற்றம்பலம் திருவாளர்கள் க. சி. நடராசா, கா. கனகசிங்கம், க. வீரசிங்கம், த. சண்முகம், இ. கருணாகரன், செ. வசீகரநாதன், பெ. தம்பையா, வே. செல்லமுத்து, பெ. சபாபதி ஆகியோர் நிர்வாக உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

சிங்கள தேர்ச்சி நிபந்தனை:

### 40 ஊழியர்கள் மட்டுமே பதவி இழந்துள்ளனர்?

கோட்டை, சனி

சிங்களத்தேர்ச்சி சம்பந்தமான அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைப் பூர்த்திசெய்யாத காரணத்தினல் 40 அரசாங்க ஊழியர்கள் மாத்திரமே பதவியிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

புதிய ஊழியர்கள் அனைவரும் தொடர்ந்து வேலையிலிருப்பது பற்றிய விஷயம் சேவைக்கமிஷன் எடுக்கவிருக்கும் ஒரு தீர்மானத்தைப் பொறுத்து அமையும் என்று தெரிகின்றது. புதிதாக சேவையில் சேர்ந்த ஊழியர்கள் சிங்களத்தில் தேர்ச்சிபெறுவதற்கு 1968 ஜூன் மாதம் வரைக்கும் அவகாசம் கொடுக்கப்பட்டிருந்தது 1068 ஜூன் 30-ம் திகதிக்குமுன்னர் சிங்களத்தில் தேர்ச்சியடைந்தவர்கள் பதவி உயர்வும், சம்பள உயர்வும் பெற்றுள்ளனர். 1968 ஜூனுக்குப் பிறகு தேர்ச்சியடைந்தவர்களின் பதவிமட்டுமே ஊர்ஜிதம் செய்யப்படும் என்று தெரிகின்றது இவர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பது பற்றி அரசாங்கம் இன்னமும் முடிவு எடுக்கவில்லை.

### 'அமைதியைப் பரப்புவதற்கு சமயங்கள் உதவவேண்டும்'

#### சுவாமி ரங்கானந்தஜி

கோட்டை, சனி

'சமயங்களையெல்லாம் ஒருங்கிணைக்கக்கூடிய வகையான குரலை நாம் எழுப்ப வேண்டும். தப்பெண்ணங்களை தோற்றுவிப்பதால் சமுதாயத்தில் பிரிவினையே தலைதூக்கும். இதனல் அமைதி கெடுகிறது'

இவ்வாறு சுவாமி றங்கானந்தஜி வெள்ளவத்தை ராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில்பேசுகையில் கூறினர்

சர்வமத காங்கிரஸினல் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டம் இதன் தலைவர் செனட்டர் டி. எல். எம். பெட்றிஸ் தலைமையில்நடைபெற்றது.

சுவாமி றங்கானந்தஜி மேலும் பேசுகையில் கூறிய என்று சொல்லிக்கொண்டிருந்து முடியாது.

மற்றவர்கள் வேறுகருத்தை கொண்டிருப்பதால் எம்மை விட அவர் எல்லா வகையிலும் மாறுபட்டவர் என்று சொல்லிவிட முடியாது.

இப்போது சமயத்துக்கிருந்துவரும் பெரிய ஆபத்து சமய வேற்றுமை அல்ல சமயப்புறக்கணிப்பே.

சமயம் புறக்கணிக்கப்பட்டால் வாழ்வின் சுவை அற்றுப்போய்விடும்.

பரஸ்பரநல்லுணர்வு, மதிப்பு சகிப்புத்தன்மை சமாதானம் இவற்றினல்தான் சமயங்களை ஒன்றாகஇணைக்கலாம்

— —

### வர்த்தகக்கல்வி

### இந்தோனேஷியாவில் சதிமுறியடிப்பு

ஜாகர்த்தா, டிச. 20

இந்தோனேஷியாவில் அரசாங்கத்துக்கெதிரான சதி முயற்சி முறியடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

கம்யூனிஸ்டுகளுக்கெதிரான ஒரு ராணுவ தளபதி இதில் தலைமைதாங்கியிருந்தாரெனவும் இவர் முன்னைநாள் அதிபர் டாக்டர் சுகர்ணோவின் ஆதரவாளரென்றும் ராணுவத்தில் சுகர்ணோவுக்காக ஆதரவு தேடிவந்தரென்றும்தெரிவிக்கப்பட்டது.

இந்த சதி முயற்சியில் தலைமைதாங்கியதாகக் கூறப்படும் மேஜர் ஜெனரல் முர்சிட் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

டாக்டர் சுகர்ணோவுடன் இரகசியத்தொடர்புகொண்டிருந்ததற்காக ஐந்து ராணுவ ஜெனரல்கள் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளார்கள் டாக்டர் சுகர்ணோ தற்போது ஜாகர்த்தாவில் வீட்டுக்காவலில் இருக்கிறார்.

——

### கொஸிஜின் மேற்கு ஜெர்மனி, விஜயம்

மாஸ்கோ, டிச, 20

ரஷ்யப் பிரதமர் திரு. கொஸியின் அடுத்த மாதம் மேற்கு ஜெர்மனிக்கு செல்லவிருப்பதாக அறிவிக்கப்பட்டது மேற்கு ஜெர்மனியுடன் ரஷ்யாதனது தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு வழிவகுக்குமுகமாகவே திரு கொஸியின் இங்கு செல்லவிருக்கிறார்.

......

### இடமாற்றத்திற்கு ஆட்சேபம்

பருத்தித்துறை, சனி

''கலைக்கப்பட்டுப் பல ஆண்டுகளாகியும் இதுவரை தேர்தல் நடாத்தப் படாதிருக்கும் நெல்லியடி பட்டின சபை ஊழியரான திருவாளர்கள் எம். கனகரத்தினம், எஸ். தியாகராசா ஆகியோரை உள்ளூராட்சி அமைச்சு இடமாற்றஞ் செய்துள்ளமை வருந்தத்தக்கது. கடமையை உணர்ந்து. கண்ணியமான முறையில் ஜனநாயக ரீதியில் இயங்கும் இவ்விரு சிரேஷ்ட உத்தியோகத்தரையும், மேற்படி பட்டின சபைத் தேர்தல் நடைபெறும் வரையிலாவது தொடர்ந்து இங்கு வைத்திருக்க வேண்டும்'' எனக் கோரும் மகஜர் ஒன்று கனுவில் சனசமூக நிலையத் தலைவர் திரு. வீ. தங்கமணியால் இன்று உள்ளூராட்சிஅமைச்

பாதகண்டத்திலே..!

டிசம்பர் 20

இலங்கை ... மா...ப்பண்ணை

... தலைவர் வி. சுப்பிரமணியம் கூறியிருக்கிற...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கி மூன்று தடவைகள் ரிவால்வரால் சுட்டான். காயமடைந்த ஒபேட்டே உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார். சுட்டவன் ரிவால்வருடன் கைது செய்யப்பட்டான்.

44 வயதான டாக்டர் சாரி சோஷலிஸத்தைப்பின் பற்றுவதென்று கட்சி மகாநாடு தீர்மானித்ததுடன் ஒரு கட்சி ஆட்சிமுறையை ஏற்படுத்துவதற்காக அரசியல் அமைப்பைத் திருத்துவதற்கு டாக்டர் ஒபோட்டேக்கு மகாநாடு அதிகாரம் வழங்கியது.

# லிபியாவிலிருந்து அமெரிக்காவும் வெளியேறுகிறது

திரிப்பொலி, டிச 20

லிபியாவிலுள்ள விமானப் படைத் தளத்தை மூடிவிடவும் அங்குள்ள துருப்புக்களைத் திருப்பி அழைத்துக் கொள்ளவும் அமெரிக்காசம் மதித்திருக்கிறது

தளத்தை எப்போது மூடுவதென்றும் துருப்புக்களைத் திருப்பி அழைக்கும் வேலை எப்பொழுது ஆரம்பமாகுமென்றும் பின்னர்தான் திகதி குறிப்பிடப்படும் என்றும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டுள்ள அமெரிக்கப் பிரதிநிதி தெரிவித்தார்.

லிபியாவிலுள்ள பிரிட்டிஷ், அமெரிக்கத் தளங்களை மூடிவிட வேண்டுமென்று இப்போதைய புரட்சி அரசாங்கம், அது ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து கோரிவந்துள்ளது.

பிரிட்டன் தனது தளத்தை அடுத்த மார்ச் மாதத்துக்கு முன்னர் மூடிவிடுவதென்று அறிவித்துள்ளதுடன் துருப்புக்களைத் திருப்பி அழைக்கவும் ஆரம்பித்து விட்டது. ......

## விஞ்ஞானிகளும் விவசாயிகளும் வேண்டும்

பத்தேகம, சனி

முன்னேற்ற மடைந்துவரும் நமது நாட்டுக்கு பலவித எழுதுவினைஞர்களும் எண்ணற்ற கலைப்பட்டதாரிகளும் தேவையில்லை. விஞ்ஞானிகளும் விவசாயிகளும் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு தேவை. அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு இவர்களே அதிகமாகத் தேவைப்படுவர்.

ஹினிடும ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. எம். எஸ். அமரசிறி உடுகம பாடசாலையொன்றின் புதிய விளையாட்டரங்கைத் திறந்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில், விஞ்ஞான ஆய்வு கூடங்களையும், நூல் நிலையங்களையும், விளையாட்டு நிலங்களையும் கிராமப்புற மாணவர்களுக்கு அளித்து கிராமப்புற முன்னேற்றத்துக்கு பெரிதும் உதவியுள்ளது. நாட்டின் வாலிபர்களான மாணவர்களுக்கு கல்வியளிப்பதற்காக அரசாங்கம் வருடாவரும் 5 கோடி ரூபாவுக்கு மேல் செலவிட்டு வருகிறது. முன்னைய அரசாங்கம் தேசிய அரசாங்கம் போன்று கிராம மக்களின் கல்வி வளர்ச்சியில் கூடிய அக்கறை கொள்ளவில்லை. அதுமட்டுமின்றிப் பல பிரச்னைகளுக்கும் தீர்வு காணவில்லை: தவறுன அவர்களின் கல்வி முறைதான் இன்று வேலையில்லாப்பிரச்னைக்குக் காரணம் எனக் குறிப்பிட்டார்.

வண மறம்ப ஹனுஜோதி தேரோ, மேற்படி கல்லூரி அதிபர் திரு. குணவர்த்தன உட்படப் பலர் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

## காரைநகரில் மணிவாசகர் விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஈழத்துச் சிதம்பரம் என்றழைக்கப்படும் காரைநகர் சிவன்கோவிலில் இன்று மாலை மணிவசகர் விழா ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறவிருக்கிறது. விழாவை காரைநகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு. ஆ தியாகராசா ஆரம்பித்து வைப்பார். மூன்று தினங்களிலும் பல சைவ அறிஞர்களின் சொற்பொழிவுகளும்இறுதிநாளான செவ்வாயன்று அருட்கவி சீ. விநாசித்தம்பியின் கதாகாலட்சேபமும் இடம் பெறும்.

## பயிர்ச்செய்கைக் குழு உத்தியோகத்தர்

புத்தூர், சனி

புத்தூர் கிழக்கு பயிர்ச் செய்கைக் குழுவின் கூட்டம் முன்னுள் பயிர்ச் செய்கைக் குழுத்தலைவர் திரு. சி. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் குழு உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு மு.சண்முகசுந்தரன், செயலாளர்: திரு. ச. தேவராசா, தனதிகாரி: திரு. க, சுப்பிரமணியம்.

தொழில் கழகம், அகில இலங்கை வர்த்தகக்கழகம், மோர்கண்டைல் கழகம், வர்த்தகக் கழகம், தேசிய மேர்கண்டைல் கழகம் ஆகிய கழகங்கள் இம்மகாநாட்டில் பங்குபற்றவுள்ளன இம்மகாநாட்டை வர்த்தக அமைச்சர் ஹியூ பெர்னுன்டோ ஆரம்பித்து வைத்தார்.

## இடமாற்றம்

பருத்தித்துறை, சனி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் திரு, பீ. எல். மனுவேற்பிள்ளை அடுத்தமாத ஆரம்பத்திலிருந்து உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நெல்லியடி வித்தியாலயமாணவர் விடுதிச்சாலைப் பிரதம பொறுப்பாளராகவும் கடமையாற்றிய இவருக்கு மேற்படி வித்தியாலய ஆசிரியர் பேரவைஒரு விருந்துபசாரம் நடாத்த விருக்கிறது.

## 2 கைத்தொழில் பேட்டைகள்

கோட்டை, சனி

யாழ்ப்பாணம், காலி ஆகிய பகுதிகளில் இருகைத்தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான அடிக்கல் அடுத்தமாதம் கைத்தொழில் கடற்ருெழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனவால் நாட்டப்படும்

காலியில் நிறுவப்படும்தொழிற்பேட்டைக்கு ஏறக்குறைய ஒரு கோடிரூபாவும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவிருக்கும் தொழிற்பேட்டைக்கு 60 லட்சம் ரூபாவும் செலவாகலாம் எனக்கணிக்கப்பட்டுள்ளது.

## யாழ். நகரில் நாடகவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம்29ம் 30ந் திகதிகளில் யாழ். நகர மண்டபத்தில் ஒரு நாடக விழாவைக் கொண்டாட சிவசக்தி கலை அரங்கத்தினர் ஏற்பாடு செய்து வருகிருர்கள்.

முதல்நாளன்று கண்ணன் கோஷ்டியினரின் மெல்லிசையுடன் 'வாசிற்றி வனிதை' என்ற நகைச்சுவை நாடகம் அரங்கேற்றப்பட இருக்கிறது.

இரண்டாம்நாள் 'பக்கத்து வீட்டுப்பவளம்' என்ற சிறுவர் சிறுமியரின் ஓரங்கநாடகமும், 'ஆகாயப் பயணத்தின் அபாயம்' என்றநகைச்சுவை நாடகமும் அரங்கேறும்.

இம்மூன்று நாடகங்களையும் எழுதித்தயாரித்திருப்பவர் ஆர். ஜெகஜோதி.

## இலங்கைத் தமிழருக்கு மாட்டுப்பண்ணை

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வரும் ஐந்தரை லட்சம் தமிழர்களுக்கும் வேலைவாய்ப்பளிக்கு முகமாக கோடைக்கானலில் மாட்டுப்பண்ணை அமைக்கப் படவிருக்கிறது. இன்னும் இவர்களுக்காக ஜாம் தொழிற்சாலை யொன்றும் நிறுவப்படவிருக்கிறது.

### ஏழைகளுக்கு இலவச நிலம்

செங்கல்பட்டு மாவட்டத்தில் இதுவரையில் 8000 ஏக்கர் நிலம் ஏழைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுமுடிவதற்குள் அது 12000 ஏக்கரை எட்டிப் பிடித்து விடுமென அறிவிக்கப்படுகிறது.

### காவிரியும கங்கையும்

கங்கையையும் காவேரியையும் ஒன்ருக இணைக்கும் திட்டத்திற்கான முதல் கட்டவேலைகள் பீகார மாநிலத்தில் தொடங்கப்படவிருக்கிறது. இத்தகவலை டெல்லி மத்திய அரசு நீர்ப்பாசன மந்திரி கே. எல். ராவ் அறிவித்துள்ளார்.

### கராம்பு பறிமுதல்

ரூபா 35000 பெறுமதியான காராம்பு மூடைகள் கார்மூலம் கடத்திச் செல்படும் பொழுது சுங்க இலாகாவினர் ஸ்ரீ பெரும்புதூர் வரை காரை விரட்டிச் சென்று கராம்பைபறிமுதல செய்ததோடு காரிலிருந்த ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

### பிரிக்கமாட்டோம்

தற்பொழுதுள்ள மாநிலங்களை மேற்கொண்டும் சிறு மாநிலங்களாகப் பிரிக்க மாட்டோம். என உள்துறை அமைச்சர் சவான் 'பம்பாய் மாநிலத்தை மேலும் இரு மாநிலங்களாகப் பிரிக்க வேண்மென்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளித்துப் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

### எங்களுக்கு அதிக ஆதரவு

இந்தியாவில் சின்டிக்கேட் காங்கிரஸை விட எங்கள் காங்கிரசுக்கே அதிக ஆதரவு இருக்கிறது. டெல்லி பாராளுமன்றத்திலும் மாநில சட்ட சபைகளிலுமுள்ள காங்கிரஸ் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் எம்மை ஆதரிக்கிருர்கள்எனகாங்கிரஸ் இடைகாலத் தலைவர் ஸி. சுப்பிரமணியம் கூறியிருக்கிருர்.

### காமராஜர் போராட்டம்

அகில இந்தியா வானொலி நிலையம் பொய்ச்செய்திகளை ஒலிபரப்பி வருவதாகவும், அதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களும் சத்தியாக்கிரகங்களும் செய்து வானொலியையே இயங்க முடியாமற் செய்துவிட எண்ணியுள்ளதாகவும் காமராஜர் அறிவித்திருக்கிருர்.

### தீக்குளிக்க வேண்டாம்

'சண்டிகார் பிரச்னையை மத்திய அரசு சுமுகமான முறையில் தீர்க்கவிருப்பதால் தயவு செய்து உங்கள் தீக்குளிப்பை நிறுத்தவும்.

இவ்வாறு இந்திரா காந்தி சீக்கியர் கட்சித் தலைவர் பதேசிங்கிற்கு எழுதிய கடிதத்தில் கேட்டிருக்கிருர்.

### காந்தி செலவு ரூபா 56 லட்சம்

டெல்லியிலுள்ள காந்தி சமாதிக்கு இதுவரையில் பாது காப்புச்செலவுக்கென ரூபா 56 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிற தென பாராளுகன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### அவதூறு வழக்கு

முதலமைச்சர் கருணநிதியை அவமதிக்கும் நோக்கத்துடன் நாத்திகம் பத்திரிகையில் செய்திவெளியிட்டதாகக்கூறி நாத்திகம் ராமசாமிமீது சென்னை அரசாங்கத்தால்தொடரப்பட்ட வழக்கு வருமானவரி அதிகாரியின்சாட்சியத்தின்பின் இம்மாதம் 31ம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

### புதிய விமானச் சேவை

சென்னைக்கும் மலேசியாவுக்குமிடையே புதிய விமானச் சேவையை ஆரம்பிக்க மலேசியா- சிங்கப்பூர விமானக் கம்பனி முடிவு செய்திருக்கிறது- இன்னும் மலேசியாவுக்கும் கொழும்புக்குமிடையிலும் ஒரு விமான சேவையை ஆரம்பிக்க இக்கம்பெனிதிட்ட மிட்டுள்ளது

### இந்திராவின் மொரிஸ்விஜயம்

பிரதமர் இந்திரா வெகு விரைவில் மொரிஸ் தீவிற்கு விஜயம் செய்யவிருக்கிருர். அவர் இங்கு வருகை தந்த மொரிஸ் பிரதமரிடமே இத்தவலைத் தெரிவித்திருக்கிருர்.

ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டம் இதன் தலைவர் செனட்டர் டி. எல். எம். பெட்றிஸ் தலைமையில்நடைபெற்றது.

சுவாமி றங்கானந்தஜி மேலும்பேசுகையில் கூறியதாவது.

வெறும் தத்துவங்களை மட்டும் பேசிக்கொண்டிருப்பதால் பயனில்லை. சமயத்தின்உயர்ந்தநோக்கம் வாழு வாழவிடு என்பதாகவே இருக்க வேண்டும்.

ந்துமதத்தவர் தமது மதத்தை மதித்து வந்துள்ளார்கள் அத்தோடு மற்ற மதத்தவர்களையும் மதிக்கப் பழகிக் கொண்டுள்ளார்கள்.

பாரதத்தில் அரசாங்கம் சகல மதங்களுக்கும் நல்ல பாதுகாப்பும் மதிப்பும் அளித்து வருகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சமயநல் உறவுகள் சமயத் தொடர்புகளை மட்டும் ஏற்படுத்தவில்லை மனிதனுக்கும் மனிதனுக்குமிடையே நல்லுறவை வளர்க்க உதவுகிறது.

தனது சமயம்தான் உண்மையான சமயம்என்று எவரும் சொல் லிவிட முடியாது. இது விஷயத்தில் வீண் வாதங்கள் நல்ல முடிவை தேடித்தர மாட்டாது.

மனிதவர்க்கம் பல எல்லைகளை கடந்துசென்று கொண்டிருக்கும் போது 'நான் இந்து' நான் கிறிஸ்தவன்' 'நான் பௌத்தமதத்தவன்' பரஸ்பரநல்லுணர்வு, மதிப்பு சகிப்புத்தன்மை சமாதானம் இவற்றினுல்தான் சமயங்களை ஒன்ருகஇணைக்கலாம்

## வர்த்தகக்கல்வி கற்ரேருக்கு வேலைவாய்ப்பு

கோட்டை, சனி

'நாடு வியாபார வர்த்தகத்துறையில் தீவிரமாக முன்னேறி வருவதால் வர்த்தக பாடங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றனர்.

கொள்ளுப்பிட்டி சின்னத்துரை வர்த்தக 'ரியூடரி' யின் பரிசளிப்புவிழாவிற்குத் தலைமைவகித்த போக்குவரத்து அமைச்சர் திரு. இ. எல். பி. ஹுருலே பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் வர்த்தகபாடங்கள் கற்றவர்களுக்கு முன்பு தொழில் வாய்ப்பு கிடைப்பது கஷ்டமாகவிருந்தது. ஆனல் இன்று மற்றவர்களிலும் பார்க்க இவர்களுக்கு நல்ல தொழில் வாய்ப்புகள் கிடைக்கின்றன. இதற்குக் காரணம் நாட்டின் பொருளாதார முன்னேற்றமேயாகும் எனக் கூறினர்.

திரு. இராஜா சின்னத்தம்பி, கொழும்பு மேயர் ஜனப் ஜபீர் ஏ.காதர் ஆகியோரும் உரையாற்றினர்.

நடைபெறும் வரையிலாவது தொடர்ந்து இங்கு வைத்திருக்க வேண்டும்'' எனக் கோரும் மகஜர் ஒன்று கனுவில் சனசமூக நிலையத் தலைவர் திரு. வீ. தங்கமணியால் இன்று உள்ளூராட்சிஅமைச்சருக்கும், நெல்லியடிப்பட்டினசபை விசேட ஆணையாளர் திரு. ஏ. ஏ யோசேப்புக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.


ஏராளமான வரியிறுப்பாளர் இம் மகஜரில் கைச்சாத்திட்டுள்ளனர்.

## சம்பளசிபார்சுகள்

கோட்டை, சனி

கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளம் பற்றிய எஸ். எம். அமரசிங்க கமிட்டியின் இடைக்கால அறிக்கையில் கண்டுள்ள சிபார்சுகள் பற்றி ஒரு வாரத்துக்குள் ஆராய்ந்து அறிவிக்கும்படி நிதி அமைச்சர் திரு. வன்னிநாயக்க ஆறு நிரந்தரக்காரியதரிசிகளின் குழுவொன்றிடம் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

கடந்த பதினேழாம் திகதிதான் அமரசிங்ககமிட்டியின் சிபார்சுகள் நிதியமைச்சருக்குகிடைத்தன. இந்தசிபார்சுகள் பற்றி அவசரமாக ஆராயும்படிபணித்துஅமைச்சர் நிரந்தரக் காரியதரிசிகளுக்கு நேற்று அனுப்பிவைத்தார்.



படக்குறிப்பு:- இப்பொழுது லண்டனில் பொம்மலாட்டம் பிரபல்யம் அடைந்து வருகிறது பிரபல பொம்மைக்காட்சி கூடமொன்றின் அதிபரான ஜோன் ரையிட் என்பவர், விநோதமான இரு பொம்மைகளை உருவாக்கிக் கொண்டிருப்பதை இங்கு காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மானே நீ நென்னலே நாளை வந்துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணுமே
போனதிசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.
... திருவம்பாவை.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna Telephone: 889.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 6-ந் திகதி (21-12-69)


## தமிழ்ப்பகுதியில் ஒரு பல்கலைக்கழகம்

தலையங்கத்தின் தலைப்பைப் பார்த்ததுமே இது பழையவிஷயம்தானே என்று வாசகநேயர்கள் அலுத்துக் கொள்ளக்கூடும். தமிழ்ப் பகுதியில் ஒரு பல்கலைக் கழகம்பற்றி பல தடவைகளிலும் இப்பத்தியில் எழுதியிருக்கிறோம் என்பது உண்மையே 'அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழிக்கிணங்க எப்படியாவது தமிழ்ப்பகுதியில் தமிழ்ப் பேசும் மக்களுக்கென பூரணத்துவம்வாய்ந்த ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்கு எம்மாலான முயற்சிகளை செய்தேயாகவேண்டுமென்பதுதான் எங்கள் நோக்கம். இதையிட்டு வாசகநேயர்களும் பெருமை கொள்ளலாம். ஆகவே மீண்டும் மீண்டும் ஒரே விஷயத்தைப்பற்றி எழுதுவதற்காக வாசகநேயர்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியமில்லையென்பது நமது துணிபு.

வடமாகாணத்திலா, கிழக்குமாகாணத்திலா ஒரு பல்கலைக்கழகம் அமைக்கவேண்டுமென்பது பற்றி ஆராய்ந்து சிபார்சுசெய்யும்படி தேசிய உயர்கல்விச் சபையை கல்விஅமைச்சர் கேட்டிருப்பதாகவும் இது பற்றி ஆராய்வதற்கு தேசிய உயர்கல்விச்சபை உபகுழுவொன்றை நியமித்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன. தேசிய உயர்கல்விச்சபை இதையாவது உருப்படியாகச் செய்யவேண்டுமென்பதே தமிழ்பேசும் மக்களின் விருப்பம். இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதில் தமிழ்பேசும் மக்களுக்கு அதிக பொறுப்பும் கடமையும் உண்டு.

தமிழ்ப்பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென்பதில் தமிழ்ப் பேசும்மக்களுக்கிடையிலோ, அரசியல் கட்சிகளுக்கிடையிலோ அபிப்பிராயபேதம் கிடையாது எங்கே எப்படிப்பட்ட பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென்பதில் தான் சிறிது கருத்துவேற்றுமை நிலவுகிறது. இந்த வேறுபாட்டைக்கூட நீக்கிக் கொள்வது கடினமல்ல.

ஆனாலும் அரசியல்கட்சிகளை மட்டும் இதில் எதிர் பார்த்திருக்காமல் கல்விமான்களும் பெற்றோர்களும் இதில் அதிக அக்கறை செலுத்தவேண்டும்.

தேசிய உயர்கல்விச்சபையின் உபகுழு வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கும் நேரில் சென்று விசாரணை நடத்தவேண்டுமென்று கோரிக்கைகள் எழுந்துள்ளன. இந்த இரு மாகாணங்களுக்கும் இந்த உபகுழு சென்று ஆராய்வது பொருத்தமும் நியாயமுமாகும். இந்தக் குழு இப்பகுதிகளுக்கு வந்தாலும்சரி, வராவிட்டாலும் சரி தமிழ்ப்பகுதியில் ஒரு பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகத்தை அமைப்பதற்குவேண்டிய தகுந்த ஆலோசனைகளை அந்தக் குழுவுக்கு கல்விமான்களும் பெற்றோரும் தெரிவிக்கத் தவறக்கூடாது. இதற்கு முன்பாக வடக்கு கிழக்கு மாகாணக் கல்விமான்கள், கல்லூரி அதிபர்கள் ஓய்வு பெற்ற பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்லூரி அதிபர்கள் முதலியோர் ஒரு மகாநாடு கூடி எந்த இடத்தில் எப்படியான பல்கலைக்கழகத்தை அமைப்பது வருங்காலச் சந்ததியினருக்கு உபயோகமாக இருக்கும் என்பதை நன்கு ஆராய்ந்து ஒரு நல்ல முடிவைச் செய்வது பயனுள்ளதாக இருக்கும் என்பது [illegible]

# ஜனநாயக ஆட்சியில் சிறுபான்மையினர் நிலை

## காந்திஜியின் கருத்துக்கள்

அந்நிய அரசாக இருப்பினும் சரி அல்லது தேசீய அரசாக இருப்பினும் சரி அதனுடைய அடக்கு முறையிலிருந்து சுதந்திரமடைவதற்கு இடையறாது செய்யப்படும் முயற்சியே சுயராஜ்ஜியம் என்பதன் பொருளாகும். சுயராஜ்ய அரசில் மக்கள் வாழ்க்கைக்கு தேவையான ஒவ்வொரு பொருளுக்கும் அரசியல் தயவைநோக்கி நிற்பார்களாயின், அது வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு நிலையாகும்.

சுயராஜ்ஜியம், என்பது நமது மனவலிமையையும், மிகப்பெரிய சிரமங்களை எதிர்த்துப் போராடுகிற நமது சக்தியையுமே பொறுத்திருக்கிறது. இதை அடைவதற்கு இடைவிடா முயற்சியும் அதைக் காப்பாற்றுவதற்கும் இடைவிடா விழிப்பும் தேவைப் படாத ஒன்று சுயராஜ்யம் என அழைக்கப்படுவதற்கு தகுதியற்றதாகும்.

அதிகாரம் மேலேயிருந்து கீழ்நோக்கி வருகிறபொழுது மக்கள் அரசை எதிர் நோக்கியிருக்க வேண்டியவர்களாய் விடுகிறார்கள். அதிகாரம் கீழே இருந்து மேல் நோக்கி செல்லும் போது அது மக்களை பல முள்ளவர்களாகச் செய்வதுடன்அதிக நாள் வரை நிலைத்திருக்கவும் செய்கிறது.

அரசியல் அதிகாரம் என்பது வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் மக்கள் தங்களது நிலைமையைச் சீர்திருத்த உதவுகின்ற ஒரு சாதனமே யல்லாது சாதனத்தின் மூலம் அடைகின்ற இறுதி பலனாகாது. அரசியல் அதிகாரம் என்பது தேசீய பிரதிநிதிகள் மூலமாக தேசீய வாழ்வைக் கட்டுப் படுத்துகின்ற ஒரு சக்தியே யாகும். தேசீய வாழ்வு பரிபூர்ணமாகி அதுவே தன்னைக் கட்டுக் படுத்திக் கொள்ளுமேயானால் பின்னர் எத்தகைய பிரதிநிதிகளும் தேவைப் படமாட்டார்கள். அப்பொழுது ஒவ்வொருவரும் தனக்குத் தானே ராஜாவாகி விடுகிறார்கள். தனது அண்டையிலுள்ள மக்களுக்கு எத்தகைய கெடுதியும் இல

அரசின் இடத்தை பெற முடியாது. பலவீனனாக இருந்தாலும் சரி தனது கௌரவம் தனது சுதந்திரம் ஆகியவற்றை காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை மனித சமுதாயத்திற்கு ஊட்ட முடியுமானால் எனது வேலை பூர்ணமாகும்.

### நற்குணமே முக்கியம்

கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடவும், சுதந்திரமாக நாம் விரும்பும் பணியைச் செய்யவும் உரிமைவேண்டும் என்று கூறுகிறோம். ஆகவே இந்த உரிமைகளை நாமும் மற்றவர்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும். பெரும்பான்மையினரின் கருத்துக்களை சிறுபான்மையினரின் மீது திணிப்பது முறையல்ல. சிறுபான்மையினருடன் அச்சமின்றி விளக்கிப்பேசி அவர்களையும் தங்கள் பக்கம் கவர முயற்சி செய்யவேண்டும். யாராவது உத்தரவிட்டோ அல்லது தண்டனை கிடைக்கும் என்ற சட்டத்தினாலோ வேலைசெய்வது என்று பழக்கப்பட்டுவிட்டோம். ஆகையால் நாம் தினமும் பெற்றுவரும் சக்தியின் காரணமாக, நம்மைவிடப் பலவீனமானவர்களுக்கு அன்னிய ஆட்சியினர் செய்த அநீதிகளைவிட பெரும் அளவில் நாம் அநீதி இழைக்க முற்படுகிறோம்.

நான் நற்குணங்களுக்கே அதிகமுக்கியத்துவம்கொடுக்கிறேன். அளவுக்கோ எண்ணிக்கைக்கோ முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இன்று நமக்குள் சந்தேகம் வேற்றுமைகள், வேண்டியவன்-எதிரி, மூடநம்பிக்கை, அச்சம், நம்பிக்கையின்மை ஆகிய பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில்பெரும்பான்மை எண்[illegible]கையில் பாதுகாப்பின்மையுடன் கூடவே ஆபத்தும் இருக்கிறதென்பதையும் உணரவேண்டும் எல்லோரும் ஒன்றிணைந்து கட்டுப்பாட்டுடன் [illegible] போ[illegible] பெரும்பான்மையினரின் ஆற்றல் அமுக்கி

மையும் இருக்கிறதா? என்று கேட்பேன். ஒருவேளை அந்த வேட்பாளர்-அந்தப் பரீட்சையில் வெற்றிபெற்றுவிட்டால், மிகச் சிறுபான்மையினரைச் சேர்ந்தவரைத்தான் நான் முதலில் தேர்ந்தெடுப்பேன். இந்தவிதமாகநியாயமான விதிகளை அனுசரித்து, இந்தியா முழுமைக்கும் நன்மையேசெய்யக்கூடியஎல்லா சிறுபான்மையினருக்கும் முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறேனேயல்லாது, இந்து அல்லதுமுஸ்லிம்கள் அல்லது எந்த சமுதாயத்துக்கோ அல்ல

பூதானயக்ஞம்

---

## 'எப்பொழுது கட்டிமுடியும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

நெடுந்தீவுமக்கள் போக்குவரத்துச் சேவைக்கென புதிதாகக் கட்டப்பட்டு வருவதாக ஆட்சிமன்றத்தில் பொதுவேலை, தபால் தந்தி அமைச்சரால் தெரிவிக்கப்பட்ட இயந்திரப் படகுவேலை எப்பொழுது முடியும் என கிளிநொச்சி எம் பி திரு கா பொ இரத்தினம் அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்ரமாவைக் கேட்டுள்ளார்

இந்தப்படகு கட்டிமுடிக்கப்பட்டு மக்கள் போக்குவரத்துச் சேவைக்கென ஈடுபடுத்தப்படும்வரை 'எலாரா' என்ற படகை கடற்படையினரின் சேவைக்கென ஒப்படைக்கவேண்டாமென்றும் திரு இரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

புதிய படகு சேவையிலீடுபட முன்னர் 'எலாரா' கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டால் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்பட நேரிடும் என்று அவா அமைச்சரிடம் எடுத்துக் கூறியுள்ளார்

... ...

## வாலிபர்களுக்கு காணி

முல்லைத்தீவு, சனி

வவுனியாமாவட்டத்தைச் சேர்ந்த படித்த வாலிபர்களுக் குமுத்தையன் கட்டு படித்த வாலிபர்திட்டத்தில் 1 ஏக்கர் மேட்டு நிலமும் 2 ஏக்கர் வயற்காணியும் வழங்க வவுனியா மாவட்ட அதிபர்தீர்மானித்துள்ளார்.

இதன் பிரகாரம் காணிக் கச்சேரிகள் முறையே 26-12-69-ல் வவுனியாக்கச்சேரியிலும், 27-12-69 காலைமுல்லைத்தீவுக்காரியாதிகாரி கந்தோரிலும் 27-12-69 பிற்பகல் நெடுங்கேணி காரியாதிகாரி கந்தோரிலும் நடைபெறும்.

மேற்படி திட்டத்தில் காணி பெறும் வாலிபர்கள் நிரந்தரமாகக்காணியில் குடியிருந்து மாவட்ட அதிபரின் திருப்திக்கேற்ப நடக்க வேண்டும் அப்படித்தவறியவர்களின் காணிகள்ரத்துச்செய்யப்படும் என அறியப்படுகிறது.

---

## சிரமதானம்

திருக்கோணமலை, ஞாயிறு

திருகோணமலையில்கடந்த 23 ஆண்டுகளாகச் சமய, சமூகத்துறைகளில் தொண்டாற்றி வரும் சக்திநிலைய உறுப்பினரும் அதன் ஆதரவாளர்களும் கொண்ட சிரமப்படையினர் சென்ற போயாதினத்தன்று நிலைய உபதலைவர் கோ. செல்லத்தம்பி தலைமையில், திருகோணமலை இந்துக்கள் பொதுமயானத்தைச் சிரமதான அடிப்படையில் துப்பரவாக்கினர்.

சக்திநிலையம் இதற்கு முன்னும் இச் சிரமதானத்தில் ஈடுபட்டது குறிப்பிடத் தக்கது. இந்த நிலையத்தினர் இன்னும் தொடர்ந்து சிரமதான இயக்கத்தில் ஈடுபட இருக்கிறார்கள்.

## இறுதிப்போட்டி

அல்லைப்பிட்டி, சனி

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன்தீவுப்பகுதி விளையாட்டுச் சங்கத்தினரால் [illegible] சென்ற திரு. இ நல்லதம்பி ஜே.பியின் வெ[illegible] கேடயத்திற்காக நடாத்தப்[illegible]

---

ஆசிரியருக்குக் கடிதம்

## கொழும்பு மாநகரசபை தேர்தல்

15-12-69ல் நடந்த கொழும்பு மாநகரசபைத் தேர்தல் மிக நல்லதோர் சூழ்நிலையை அரசியல்வானில் உருவாக்குமென எதிர்பார்க்கலாம். வகுப்பு வாதம் பேசிய யாவருக்கும் நல்லதோர் படிப்பினை ஏற்படுத்திவிட்டது மக்கள் தங்களுக்கு உண்மையில் யார் சேவை யாற்றுவார்கள் என நன்கு ஆராய்ந்து தங்கள் தீர்ப்புகளை வழங்கியுள்ளார்கள். சிங்களவர் தமிழர் என்ற வேற்றுமையானபேச்சுக்கே இடமளிக்கவில்லை.

உதாரணமாக தலைநகர மக்கள் திருவாளர்கள் நீதிராசா, மகேந்திரா, திருமதி மீனா இரத்தினம் போன்றவர்களை தெரிவு செய்தது போற்றுதற்குரியது. அதே சமயத்தில் முருகன் கோவிலும், தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாகிய ஜிந்துப்பிட்டி வட்டாரத்தில் ஓர் பிரபல தமிழர் முப்பது வாக்குகள்மாத்திரம்பெற்று தோற்கடிக்கப்பட்டது வேதனைக்குரிய விஷயமாகும் அதேநேரத்தில்அப்பகுதிமக்கள் நல்ல ஜனநாயகமரபுப்படி வகுப்புவாதம் பேசாத ஒருவரை தேர்ந்துஎடுத்தது குறிப்பிடத்தக்கது.

கொள்கை அடிப்படையில் இப்படியாக தேர்தல் நடப்பதுதான் ஜனநாயக பாரம்பரியம். தி மு க இலங்கைக்கும் வந்துவிட்டதே என்று பூச்சாண்டி காட்டியவர்களுக்கு கொழும்பு மாநகர மக்கள் நல்லபாடம் கற்பித்துவிட்டார்கள். இதே போல எதிர்வரும்பொதுத் தேர்தலிலும் நாட்டுமக்கள் யாவரும் வகுப்பு வேற்றுமைகளை மறந்து நல்ல நிலையானகொள்கையுடையதலைவர்களை ஆட்சிமன்றத்திற்கு தெரிவு செய்தால் இலங்கைமக்கள் ஜனநாயகத்தில் ஊறித்திளைத்தவர்கள் என உலகமக்களால் போற்றப்படுவார்கள் அப்பொழுது தான் பலநாட்டுத் தலைவர்கள் இலங்கையின் வளர்ச்சியைக்கருதி பல பொருளாதார உதவிகள் செய்ய முன் வருவார்கள்.

நல்லஸ்திரமான கொள்கையுடைய தலைவர்களால் தான் ஜனநாயகத்தின்ஆணிவேரான பேச்சு, எழுதது, பத்திரிகைச் சுதந்திரங்கள் பறிபோகாமல் பாதுகாக்கப்படும் ஐ நா சபையிலும் இலங்கையின் செல்வாக்கு மேல்நிலையடையும்அண்டை நாடுகளான பாகிஸ்தான்' இந்தோனேசியா நாட்டுமக்கள் விட்டதவறுதலால் தான் அங்கே இப்பொழுது ஜனநாயகம் மறைந்து சர்வாதிகாரம் தலையோங்கி நிற்பதை காண்கிறோம் பொதுமக்கள் கையில்தான் இலங்கையின் சுபீட்சமான எதிர்காலம் தங்கியிருக்கிறது

ஐ இராமசாமி
புன்னாலைக்கட்டுவன்

## திருமலையில் ஆர். ஜி. போட்டியிடுவது நிச்சயம்

அம்பாந்தோட்டை ஞாயிறு

ஆர்.ஜி. சேனநாயக்கா அடுத்த பொதுத்தேர்தலில் திருகோணமலைத் தொகுதியிலும் போட்டியிடுவார்என்பது நிச்சயம் என்று இப்பொழுது தெரிகின்றது.

திருகோணமலைத்தொகுதியிலும் தம்பதெனியதொகுதியிலும் ஏககாலத்தில்அவர் போட்டியிடப்போவது குறித்து திரு. சேனநாயகா கருத்து வெளியிட்டிருக்கிறார்.

தம்பதெனிய தொகுதியிலும், களனிய தொகுதியிலும்ஒரேசமயம்நான்1956ல் போட்டியிட்டபோது இந்த நாட்டில் ஒரு பெரிய அரசியல் புரட்சி ஏற்பட்டது. அடுத்த தேர்தலில் நான் ஒரே சமயத்தில் தம்பதெனியாவிலும் திருக்கோணமலையிலும் போட்டியிடும்போது மீண்டும் ஓர் எழுச்சி ஏற்படவே செய்யும் என்று திரு ஆர். ஜி.செனநாயக்கா குறிப்பிட்டார்.

சிங்கள மகாஜன பெரமுனையின் தலைவர் திரு ஆர். சேனநாயக்கா, திஸ்ஸமகாரமை தொகுதியிலுள்ள அம்பலாந்தோட்டையைச் சேர்ந்த பாராம என்ற இடத்தில் ஒரு கூட்டத்தில் பேசினார்.

அந்தக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்

---

பத்துவயதுக்கு மேல்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மென்பதே தமிழ்பேசும் மக்களின் விருப்பம். இந்த விருப்பத்தை நிறைவேற்றுவதில் தமிழ்பேசும் மக்களுக்கு அதிக பொறுப்பும் கடமையும் உண்டு.

தமிழ்ப்பகுதியில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட கழகத்தை அமைப்பது வருங்காலச் சந்ததியினருக்கு உபயோகமாக இருக்கும் என்பதை நன்கு ஆராய்ந்து ஒரு நல்ல முடிவைச் செய்வது பயனுள்ளதாக இருக்கும் என்பது நமது கருத்து.

## '14 வருட காலமாக சம்பளம் மாற்றியமைக்கப்படவில்லை'

யாழ்ப்பாணம், ஞாயிறு

மழைகாலத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வீதியிலுள்ள தண்ணீரும் வீதியைச் சுற்றியிருக்கின்ற வீடு வளவுத் தண்ணீரும் உடனடியாக போகக்கூடிய முறையில் நீர்ப்பாச்சிலாகா இஞ்சினியர் மூலம் மட்டம்பார்த்து ஒரு வடிகால் கட்டித் தரும்படி இச்சபை கேட்டுக் கொள்கிறது.

யாழ்ப்பாணம் மாநகர சபை கூட்டம் மேயர் திரு எஸ் நாகராசா தலைமையில் நடந்தபோது திரு அ நடராசா கொண்டுவந்த மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

திரு அ நடராசா கொண்டுவந்த கீழ்க்காணும் இத்தீர்மானங்கள் நிறைவேறின நல்லூர்வட்டக்கு சன சமூக நிலையம் தொடங்கி மூன்றுவருட காலமாகிவிட்டது. அதற்கு உதவிப்பணம் கோரி ஆணையாளருக்கு விண்ணப்பித்திருந்தும் இதுவரையும் கவனிக்கப்படவில்லை. ஆகவே அதற்காகிய உதவிப்பணம் வழங்கப்படவேண்டுமென இச்சபை கேட்டுக் கொள்கிறது.

''உள்ளூராட்சி மன்றங்களின் சேவையிலிருக்கும் சபை ஊழியர்களது சம்பளம் 1955-ம் ஆண்டின் சம்பள ஆணைக்குழுவின் சிபார்சின்படியே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாக அரசாங்க உள்ளூராட்சி ஊழியர்களது சம்பளம் ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் ஒருமுறை மாற்றியமைக்கப்படுவது வழக்கம். ஆனால் சபை ஊழியர்களது சம்பளம் கடந்த 14 வருட காலமாக மாற்றியமைக்கப்படவில்லை. அத்துடன் அண்மைக் காலத்து உள்ளூராட்சி மசோதாவின்படி மாநகர சபைக்கு ரூபா 125/- வரை அடிப்படைச்சம்பளம் வழங்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது

ஆகவே, உடனடியாக உள்ளூராட்சி மன்றங்களின் சேவையிலிருக்கும் சபை ஊழியர்களது சம்பளத்தை மாற்றியமைப்பதற்கு ஓர் சம்பள ஆணைக்குழுவை நியமிக்குமாறு கௌரவ உள்ளூராட்சி அமைச்சரை அவர் இச்சபைவேண்டுகிறது.'

யாழ். மாவட்டத்துக்கு

## 57 ஆசிரியர்கள் ஜனவரியில் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தற்போது வெளியூர்களில் வேலைபார்த்து வரும் 57 தமிழ் ஆசிரியர்கள் அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இட மாற்றம் செய்யப்படவிருக்கிறார்கள்.

அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்க முயற்சி காரணமாகவே இவர்கள் இங்கு இடமாற்றப்படவிருக்கிறார்கள்.

இந்த ஆசிரியர்கள் வெளியூரில் 7 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றியவர்களென்றும்கல்வி அமைச்சரின் உதவிக் காரியதரிசி திரு. சிறில்கமகேயிடம் இவர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டுமென மேற்படி சங்கத்தினர்வற்புறுத்தி வந்ததாகவும் இதனைத் தொடர்ந்தே இவர்கள் இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்களெனவும் இச் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்

இடமாற்றம் செய்யப்படும் இவர்களது இடத்துக்கு அதிககாலம்- வெளியூரில் சேவையாற்றாத, பயிற்சிக் கலாசாலையிலிருந்து வெளிப்படும் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களெனத்தெரியவருகிறது

வெளியூர்களில் 6 வருடங்கள் பூர்த்திசெய்த ஆசிரியர்களை இங்கு இடமாற்றம் செய்வதற்கும் இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக இச்சங்கத்தின் தலைவர் திரு த சண்முகதாசன் தெரிவித்தார்

பிரதிநிதிகளும் தேவைப்படமாட்டார்கள். அப்பொழுது ஒவ்வொருவரும் தனக்குத் தானே ராஜாவாகி விடுகிறார்கள். தனது அண்டையிலுள்ள மக்களுக்கு எத்தகைய கெடுதியும் இல்லாதவாறு ஆட்சி செய்கிறார்கள். ஆகையால் லட்சிய ஏற்பாட்டில் எத்தகைய அரசியல் அதிகாரமும் இருப்பதில்லை. என வேதனமிகக் குறைந்த அளவு ஆட்சி செய்யும் அரசே சிறந்தது என தோரோ குறிப்பிட்டுள்ளார்.

உலகிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் தகுதி பெறுவது, பூரண சுதந்திரத்துடன் தனது வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்ளும் திறமை பெறுவது ஆகியவையே சுயராஜ்ஜியத்திற்குத் தேவையான பயிற்சியாகும் நல்ல அரசு சுயராஜ்ஜிய பின்மையுடன் கூடவேஆபத்தும் இருக்கிறதென்பதையும் உணரவேண்டும் எல்லோரும் ஒன்றிணைந்து கட்டுப்பாட்டுடன் செயல்படும் போது ன்பெரும்பான்மையினரின் ஆற்றல் அமுக்கிவைக்க முடியாத பெரும்ஆற்றலாக ஆகிவிடுகிறது. ஆனால் ஒரு சிலா இந்தப்பக்கம்இழுக்து. வேறுசிலர் எங்குஇட்டுச் செல்லுகிறோம் என்பதையும் அறியாமல் செயல்படுத்தும்போது இந்த பெரும்பான்மைப் பலத்தை அழிவு சக்தி என்று கருதிக்கொள்ளுங்கள்.

யாராவது வேட்பாளர் என்னிடம் வந்தால் அவரிடம் நான் ஒன்றைத்தான் கேட்பேன். ஆண் அல்லது பெண்ணின் எத்தனை குணங்கள் உன்னிடமிருக்கிறது? சந்தர்ப்பத்திற்குஉகந்த முறையில் செயலாற்றும் தகுதியும் திற

நாளை கல்முனை பட்டினசபைத் தேர்தல்

# மாமனும் மருமகனும்; கணவன் மனைவியும் போட்டி

(திருமதி செல்வம் தருமராசா)

ஏழு வட்டாரங்களைக் கொண்ட கல்முனை பட்டின சபையின் தேர்தல் நாளை நடைபெற இருக்கின்றது. சுமார் 3 மைல் சுற்றளவில் அமைந்துள்ள இப்பட்டின சபை ஏறத்தாழ 10 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்டது. கல்முனைப் பட்டின சபை கிராமசபையாக இருந்த காலத்தில் தமிழ்மக்களுக்கு 3 வட்டாரங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. காலக்கிரமத்தில் இரண்டு வட்டாரங்களில் ஒன்று மட்டுமே தமிழர்கள் கைவசம் இருக்கின்றன. சுமார்இரண்டாயிரம் வாக்காளர்களைக் கொண்ட தமிழர்கள் வசிக்கும் இரண்டு வட்டாரங்களையும் வருகிற முறைத் தேர்தலுக்கு 3 வட்டாரங்களாக்க வேண்டும் என்ற பலருடைய ஆசை வெகு விரைவில் முடிவு பெறுது என்பதற்கு அரசியல்வாதிகளின் தலையீடும் ஒரு காரணமாக இருந்து வருகின்றது.

சுமார் 15 வருடங்களாக கிராமசபைக் காலம் தொடக்கம் பட்டினசபையில் இதுவரை அங்கத்தவராக இருந்து வருபவரும் 1967ம் வருடத்தில் பட்டின சபைத் தலைவராகவும் இருந்த திரு எம் தம்பிப்பிள்ளையும்அவருடையமருமகனும், சென்ற வருடத்தில் பட்டின சபையின் உபதலைவராக இருந்தவருமான எம் கனகசூரியமும் இம்முறைபோட்டியிடுகின்றனர்.

கல்முனை சரித்திரத்திலே இரண்டாம் வட்டாரம் மிகவும் முக்கியமாக இடம் பெற்றுள்ளதற்கு முக்கிய காரணம் இம்முறை பெண்மணி ஒருவர் போட்டியிடுவதேயாகும். சென்ற முறை 2ம் வட்டார அங்கத்தவராகவும் உபதலைவராகவும் இருந்த திரு எம் கனகசூரியத்தின் மனைவியாரே இம்முறை 2-ம் வட்டாரத்தில் போட்டியிடுகின்றார். இவரை எதிர்த்து இருவர் போட்டியிடுகின்றனர். கணவனும் மனைவியும் அங்கத்தவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு பட்டினசபை சென்றால் கிழக்கு மாகாண ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை இவர்களையே சாருவதாகும்.

தமிழர்களுக்குச் சொந்தமான இவ்விரண்டு வட்டாரங்களிலும் கட்சியின் பேரில் போட்டி நடைபெறவில்லை. ஆனால் உறவுமுறை கொண்டும் சமயம்பற்றியும் பேசி வாக்குப்பெற முனைந்து வருகின்றனர்.

முஸ்லிம்களைப் பொறுத்த மட்டில் அவர்களுடைய 5 வட்டாரங்களிலும் கட்சியின் பெயரிலே போட்டியிடுகின்றனர் 5 வட்டாரங்களிலும் யூ. என். பி.யும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நேரடியாகப் போட்டியிடுகின்றனர். கல்முனை பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் எம் சி அகமது அவர்கள் தனது 7ம் வட்டாரத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றார். திரு. எம். தம்பிப்பிள்ளை அவர்கள் பட்டினசபைத் தலைவர் பதவியிலிருந்து விலகிய பின்பு இதுவரை ஜனாப் எம் சி அகமது பட்டினசபைத் தலைவராக இருந்து வருகின்றார். இவரை எதிர்த்து யூ. என். பி.யின் சார்பில் முன்னை நாள் உபதலைவர் சாகுல் ஹமீட் போட்டியிடுகின்றார். ஜனாப் சாகுல் ஹமீட், ஜனாப் எம் சி அகமது அவர்களுடன் போட்டியிடும் அதேவேளையில் 2ம் வட்டாரத்திலும் யூ என் பி அபேட்சகராகக் போட்டுயிடுகிறார். மொத்தம் இரண்டு வட்டாரங்களில் போட்டியிடுகிறார் ஜனாப் சாகுல் ஹமீட்.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 21-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அல்லைப்பிட்டி, சனி

விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன்தீவுப்பகுதி விளையாட்டுச்சங்கத்தினரால் காலம் சென்ற திரு. இ நல்லதம்பி ஜே.பியின் வெற்றிக் கேடயத்திற்காக நடாத்தப்பட்டு வரும் 'பி' பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டமும் பரிசில் வழங்கலும் அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் விளையாட்டுத்திடலில் நடைபெறவிருக்கின்றது.

அன்று காலம் சென்ற திரு வ. பசுபதிப்பிள்ளையின்வெற்றிக்கேடயத்திற்காக நடாத்தப்பட்டுவரும் 'ஏ' பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய விளையாட்டுக்கழகத்துக்கும் பரிசில் வழங்கல் வைபவமும் நடைபெறும்.

சக்திநிலையம் இதற்கு முன்னும் இச் சிரமதானத்தில் ஈடுபட்டது குறிப்பிடத் தக்கது. இந்த நிலையத்தினர் இன்னும் தொடர்ந்து சிரமதான இயக்கத்தில் ஈடுபட இருக்கிறார்கள்.

## அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வன்னேரிகுளம், முள்ளியாறு உபதபாற்கந்தோர்களுக்கு தொலைபேசித்தொடர்பு வசதிகள் இந்த நிதிஆண்டில் செய்துகொடுக்குமாறும் துணுக்காய், மல்லாவி, வேரவில், தருமபுரம்ஆகிய இடங்களிலுள்ள 4 உபதபால் நிலையங்களுக்கும் மேலதிகமாக தபால் சேவகர்களை நியமிக்குமாறும் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் தால், தந்தி அமைச்சரைக்கேட்டுள்ளார்.

சித்த ஆயுள்வேத கல்லூரி

# கட்டிட வேலைகளை ஆரம்பிக்க ஏற்பாடு

## சாவகச்சேரி எம். பி. முயற்சி

மட்டுவில், வெள்ளி

வடபகுதியில் முதலாவதாக நிறுவப்படவிருக்கும் சித்த ஆயுள்வேதக் கல்லூரியின், கட்டிடத்திற்கான ஆரம்பவேலைகள் அனைத்தையும், 1970ம் ஆண்டுஜனவரி முற்பகுதியில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ ந நவரத்தினம் மேற்கொண்டுள்ளார்.

அரசாங்க மராமத்துபகுதியின் கீழ்நடைபெறவிருக்கும் இந்த சித்த ஆயுள் வேதக் கல்லூரியின் கட்டிட வேலைக்கான தொழிலாளர்களை அரசாங்க தொழில் இலாகா தான்திரட்டுமென்றும்இதில் சாவகச்சேரித் தொகுதியிலுள்ளதொழிலாளர்களுக்கே முதலிடம் கொடுக்கப்படும் என்றும் தெரியவருகிறது.

வடபகுதியிலே முதன் முதலாக அரசாங்கத்தினால் மாபெரும் சித்த ஆயுள்வேதக் கல்லூரியை கைதடியில் நிறுவவிருப்பதும், இதற்கான அடிக்கல்லை முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன நாட்டியதும் அறிந்ததே.

சுமார் ஐந்து லட்சத்து இருபதினாயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் இந்த சித்த ஆயுள் வேதக் கல்லூரியை கைதடியில் நிர்மாணிப்பதைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள பல தொழிலாளர்கள் பயன்பெறச் சந்தர்ப்பம் கிடைப்பதோடு எத்தனையோ பல சித்த ஆயுள் வேத டாக்டர்களும் இப்பகுதியில் உருவாகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இந்த மாபெரும் சித்த ஆயுள்வேதக் கல்லூரியின் கட்டிட வேலை கொந்தராத்தை அரசாங்க வேலைப் பகுதி இலாகாவே பொறுப்பேற்றுச் செய்யும் என்றும் தெரியவருகிறது

## தற்கொலை

நல்லூர், சனி

திருமணப் பதிவு நடைபெற்று ஏழு நாட்களுக்குப் பின்னர் திரேசம்மா (வயது 21) என்ற இளம் பெண் தன் உடலில் பெற்றோல் ஊற்றி தீமூட்டித் தற்கொலை செய்துகொண்டார்.

ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கு நேற்று மரணமானார்.

மரணவிசாரணை அதிகாரி திரு என். இராசநாயகம் விசாரணையின் பின் தற்கொலைஎனத் தீர்ப்பளித்தார். குடும்ப சச்சரவே காரணமென மரணவிசாரணையில் கூறப்பட்டது.

லும், களனிய தொகுதியிலும்ஒரேசமயம்நான்1956ல் போட்டியிட்டபோது இந்த நாட்டில் ஒரு பெரிய அரசியல் புரட்சி ஏற்பட்டது. அடுனார்.

அந்தக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்

பத்துவயதுக்கு மேல்

# பையன்கள் மனக்கிலேசம் அடைந்து விடுகிறார்கள்

## கூட்டுக் கல்வி பற்றி மேற்றிராணியார் கருத்து

வென்னப்புவ, சனி

மாணவர் மாணவிகளுக்கு தனித்தனியே பாடசாலைகளை அமைப்பது பற்றிய இன்றைய அரசாங்கத்தின் கொள்கை புத்திசாலித்தனமானதும், விஞ்ஞான ரீதியானதுமாகும் என்று சிலாபம் மேற்றிராணியார் வண. டாக்டர் எட்மன்ட் பீரிஸ் கூறினார்.

மாரிவிலபாலிக்க மகா வித்தியாலயத்துக்கான விஞ்ஞான ஆய்வுகூட கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற கூட்டத்தில் வண. பீரிஸ் சொற்பொழிவாற்றினார்.

பத்துவயதுக்குப் பின்னர் பெண்கள் கல்விகற்பதில் துரிதமான முன்னேற்றமடைகிறார்கள். ஆனால் பத்து வயதுக்குப் பின்னர் ஆண்கள் மன அமைதியை இழந்து தடுமாறுகிறார்கள் என்று மேற்றிராணியார் குறிப்பிட்டார்.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே பள்ளிகளை அமைப்பதின் மூலம் சிறப்பான கல்வி வளர்ச்சியைக் காணமுடியும் என்றும் இருதரப்பினரதும் உடல் மன வளர்ச்சிகள் மாறுபட்டவையென்றும் அவர் குறிப்பிட்டார். இருதரப்பினரும் ஒன்றாகவிடுக்கப்படும்பொழுது இருதரப்பினருக்குமே தடங்கல்கள் ஏற்படுகின்றனவென்றும் முன்னைய அனுபவத்தைப் பார்க்கும்போதும் இருதரப்பினருக்கும் வெவ்வேறு பள்ளிகளை அமைப்பதுபுத்திசாலித்தனமாகும் என்பது புலனாகின்றது என்றும் மேற்றிராணியார் கூறினார்.

## திருத்த கோரிக்கை

அல்லைப்பிட்டி, ஞாயிறு

நெடுங்காலமாக போக்குவரத்துச் செய்வதற்கு முடியாமல் பழுதடைந்த நிலையில் இருந்து வரும், மண்கும்பான் சாட்டி, வேலணைவீதி, நெடுந்தீவு மாவலி பெரிய துறைவீதி வேலணை அம்மன் கோவில்வீதிஆகியனவற்றை போக்குவரத்து பயன்படும் வகையில் சீர்திருத்த நடவடிக்கை எடுக்கும்படி பெருவழித்திணைக்களகண்காணிப்புப் பொறியியலாளருக்கு கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கா பொ இரத்தினம் கடிதம் மூலம் கேட்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org